(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 4.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் புத்தகம்

**2026 ஜூலை 21, செவ்வாய்க்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**

**2026 ஜூலை 10, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2026 ஜூலை 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

180/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 05 வருட காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையினால் பிறப்பிக்கப்பட்ட மின்சாரத்தின் மொத்த அளவினை வெவ்வேறாகவும்;

(ii) அடுத்த 15 வருடங்களுக்காக எதிர்பார்க்கப்படும் மின்சாரப் பிறப்பாக்கத்தின் அளவினை வெவ்வேறாகவும்;

(iii) மின்பிறப்பாக்க முறைமை மற்றும் பிறப்பிக்கப்பட்ட மின்சாரத்தின் அளவினையும் சபையினால் பிறப்பிக்கப்பட்ட மின்சாரத்தின் அளவினையும் தனியார் துறையிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவினையும் வெவ்வேறாகவும்;

(iv) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கடந்த 05 வருடங்களுக்கான தடைப்படக்கூடிய மற்றும் தடைப்படாத மொத்த பிறப்பாக்க ஆற்றலை வெவ்வேறாகவும்;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தேய்மானக் கூறுகள் உள்ளடங்கலாக, ஒரு அலகிற்கான செலவினையும், ஒரு அலகிற்கான நிதிச் செலவுகளையும் சபையின் உற்பத்திச் செலவுகளையும் வெவ்வேறாகவும்;

(vi) கடந்த 05 வருடங்களுக்கான மொத்த மின் நுகர்வினையும் மற்றும் அடுத்த 05 வருடங்களுக்கான எதிர்பார்க்கப்படும் மின் நுகர்வினையும் வெவ்வேறாகவும்;

(vii) நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்படும் ஒரு அலகிற்கான இலாபத்தினையும்/ நட்டத்தினையும் விற்பனை விலையில் சேர்க்கப்பட்டுள்ள வரிகளையும் வெவ்வேறாகவும்;

(viii) அடுத்த 03 வருடங்களுக்காக எதிர்பார்க்கப்படும் மொத்த இலாபத்தினை வெவ்வேறாகவும்;

(ix) கடந்த 05 வருடங்களுக்கான சராசரி அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச மின் தேவையினை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

194/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இந்நாட்டிற்கு கோழி இறைச்சி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட கோழி இறைச்சியின் அளவும் அதற்காக செலவிடப்பட்ட தொகையும் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) சந்தையில் கோழி இறைச்சியின் விலையை நிலையாகப் பேணுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

234/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதாக 'வளமான நாடு — அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி சட்டம் நீக்கப்படுமா என்பதையும்;

(iii) அச்சட்டம் எக்காலப்பகுதியில் நீக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

325/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வைத்தியசாலைகளின் நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவைப்படும் மிக முக்கியமான 15 பொருட்கள் மற்றும் அத்தியாவசியமானவை என இனங்காணப்பட்ட 354 பொருட்கள் தொடர்பான தற்போதைய கையிருப்பு நிலைமை யாதென்பதையும்;

(ii) மேற்படி பொருட்களில் முற்றுமுழுதாகக் கையிருப்புத் தீர்ந்துள்ள பொருட்கள் மற்றும் 02 மாதங்களுக்கு மாத்திரம் போதுமான கையிருப்புள்ள பொருட்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) விநியோகஸ்தர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய 60, 90, 120 மற்றும் 150 நாட்களைக் கடந்துள்ள நிலுவைக் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(iv) 60 நாட்களைக் கடந்துள்ள நிலுவைக் கொடுப்பனவுகள் அவ்வாறு தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மின்சாரம், நீர், உணவு மற்றும் ஆடைச் சலவைக்கான கொடுப்பனவுகளின் தற்போதைய நிலைமைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) உள்நாட்டு உற்பத்தி விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய, 60 நாட்களைக் கடந்து தாமதமடைந்துள்ள கொடுப்பனவுகளைத் செலுத்தித் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

553/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் திரு ரோஹன விஜேவீரவின் மனைவி மற்றும் பிள்ளைகளின் பெயர்கள் யாவை;

(ii) திரு ரோஹன விஜேவீரவின் படுகொலையின் பின்னர் இற்றைவரை அவர்கள் வாழ்ந்துவந்த ஒவ்வொரு இடம் மற்றும் மேற்படி ஒவ்வொரு இடத்திலும் வாழ்ந்த காலப்பகுதி வெவ்வேறாக யாது;

(iii) அவர்களின் பராமரிப்புச் செலவினம் இலங்கை அரசினால் மேற்கொள்ளப் பட்டிருப்பின், அதற்காக செலவிடப்பட்ட செலவினம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(iv) அவர்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை வேறு எவரேனும் ஆள் அல்லது குழுவொன்று ஏற்றுக்கொண்டிருப்பின், அவ்வாறு பராமரித்த காலப்பகுதி மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் வெவ்வேறாக யாது;

(v) அவர்களின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து நிதி உதவி கிடைத்துள்ளதா;

(vi) ஆமெனில், நிதி உதவி வழங்கிய நாடு, ஆட்கள் மற்றும் நிதி உதவி வழங்கப்பட்ட காலப்பகுதி வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

6.

830/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு பூராகவும் நிறுவப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பெற்றோலிய விநியோகஸ்தர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் தரகுத்தொகை யாதென்பதையும்;

(iv) மேற்படி தரகுத் தொகையை மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது குறித்த தகவல்களைச் சமர்ப்பிக்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1633/2025

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தற்போது பதிவு செய்யப்பட்டு கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பாற்பண்ணையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பண்ணையாளர்களிடம் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை அண்ணளவாக யாதென்பதையும்;

(iii) மேற்படி கால்நடைகளின் தீவனத்திற்காகப் புற்களை அறுப்பதற்குப் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புற்றரைகளின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1962/2026

கௌரவ அஜித் கிஹான்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 முதல் 2025 ஆம் ஆண்டு வரை வருடாந்த தேங்காய் உற்பத்தி ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் தேங்காய் உற்பத்தி மேற்படி காலப்பகுதியினுள் ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

(iv) இந்நாட்டு பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்கும் தெங்கு சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக அமைச்சு கொண்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(v) தெங்கு பயிர்ச்செய்கைக்கு பூச்சிகளால் ஏற்படும் சேதத்தை தடுப்பதற்காக ஏதேனுமொரு புதிய வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2060/2026

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கேகாலை மாவட்டத்தின், கொட்டியாகும்புர பிரதேசத்தில் வாழும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கடுமையான குடிநீர் பிரச்சினையால் அவதியுறுவதை அறிவாரா என்பதையும்;

(ii) 2023 ஆம் ஆண்டு தொடக்கம் அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 02 கருத்திட்ட முன்மொழிவுகளும் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உத்தேசக் கருத்திட்ட முன்மொழிவுகளை அங்கீகரித்து, அதற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படிக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கொட்டியாகும்புர பிரதேசத்தில் நிலவும் நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப் பெறும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

2085/2026

கௌரவ ருவன் மாபலகம,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குச் சொந்தமான ஹஜ் நிதியத்தில் தற்போது உள்ள மீதி யாது;

(ii) மேற்படி நிதியத்தில் பணம் வரவு வைக்கப்படும் விதம் யாது;

(iii) மேற்குறிப்பிட்ட நிதியத்தின் பணத்தைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காகச் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iv) மேற்குறிப்பிட்ட திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் பெறுபேறுகள் குறித்த விபரமான அறிக்கையைச் சமர்ப்பிப்பாரா;

(v) இந்நிதியம் வருடாந்தம் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றதா;

(vi) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழான தீர்மானம் (இல. 1),— "வெளிநாட்டுப் பணமனுப்பல்களின் பிரகாரம், வெளிநாடுகளில் பணிபுரிகின்ற இலங்கையர்களுக்கு முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் வழங்குவதற்குரியதாக 2022 மே 01 ஆம் திகதி தொடக்கம் 2023 செப்தெம்பர் 15 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட உத்தேச திட்டம்" தொடர்பாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2025.04.02 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டதும், 2025 ஒக்டோபர் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமான பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் 318 எனும் இலக்கத்தைக் கொண்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையானது, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் ஏற்பாடு களுக்கமைய சட்டத்துறை தலைமையதிபதியின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழான தீர்மானம் (இல. 2),— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் குறித்த நிறுவனங்கள் தொடர்பாக அக் குழுக்கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சபையாவணப்படுத்தப்பட்ட பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர்களில் உள்ளடக்கப்பட்ட அறிக்கைகள் ஊடாக இனங்காணப்பட்ட பின்வரும் இணைப்புகளில் குறிப்பிடப்படுகின்ற சம்பவங்கள் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 120(4) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

**இணைப்பு:**

| **தொடர் இலக்கம்** | **நிறுவனம்** | **குழுக்கூட்டம் நடாத்தப்பட்ட திகதி** | **அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதி மற்றும் பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்** | **குறிப்பிட்ட சம்பவம்/ சம்பவங்கள்** |
|---|---|---|---|---|
| 1. | தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரண அதிகாரசபை | 2025.03.05 மற்றும் 2025.03.27 | 2025.06.04 PS 212 | 1. 510 கிலோ கிராம் நிறையுடைய Rough Sapphire Cluster மாணிக்கக்கல். |
| | | | | 2. ஹெரணியாவக்க மாணிக்கக்கல் படிவுகளை அகற்றிக்கொள்வதற்கான கருத்திட்டம். |
| | | | | 3. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு கட்டிடமொன்றை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளல். |
| 2. | ஶ்ரீஜயவர்தன புர பொது வைத்தியசாலை சபை | 2025.05.15 | 2025.07.24 PS 242 | 1. மின்சாரக் கட்டமைப்பின் பாதுகாப்புக்குத் தருவிக்கப்பட்ட சாதனங்களை பிரதான கட்டமைப்புடன் இணைத்தல். |
| | | | | 2. கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலுள்ள முறைகேடுகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள். |
| | | | | 3. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | காணிச் சீர்திருத்த ஆணைக்குழு | 2025.05.08 மற்றும் 2025.07.17 | 2025.12.18 PS 391 | 1. காணிச் சீர்திருத்த ஆணைக்குழு நிதியிலிருந்து சேதனப் பசளைத் திட்டத்திற்கு பணம் செலவிடுதல் |
| | | | | 2. திரு. எஸ்.ஆர். ரெங்கனாதனுக்கு காணி வழங்குதல் (மாத்தளை பேகுரூப் தோட்டம்). |
| | | | | 3. திருமதி. மாலினீ நாணயக்காரவுக்கு காணி வழங்குதல் (இம்புல்கஸ்வாடிய, கட்டான) |
| | | | | 4. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு காணிகளை வழங்குதல். |
| 4. | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 2025.06.04 | 2025.12.18 PS 392 | 1. பல்கலைக்கழகத்தில் புதிய நூலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல். |
| | | | | 2. பல்கலைக்கழக பணியாட்டொகுதிக்கு வீடமைப்புத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் போது இடம்பெற்ற முறைகேடுகள். |
| | | | | 3. 2021ஆம் ஆண்டில் தொழிநுட்ப பீடத்திற்கு நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்தல். |
| | | | | 4. பல்கலைக்கழக வளாகத்தில் அனுமதியின்றி மண் வெட்டுதல். |
| | | | | 5. உப வேந்தருக்குச் சொந்தமான வீடொன்றினை குத்தகை அடிப்படையில் மாணவர் விடுதிக்காக வழங்குதல். |
| 5. | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை | 2025.08.20 | 2025.12.18 PS 394 | 1. வீரவில சுற்றுலா பங்களாவைப் புனரமைத்தல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | லங்கா சதொச லிமிடட் | 2025.10.10 | 2025.12.18<br>PS 397 | 1. ஊழியர்களின் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்தல். |
| | | | | 2. கிளிநொச்சி நகரத்தில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு உரித்தான 15000 சதுர அடி கட்டிடத்தை குத்தகை அடிப்படையில் வழங்குதல். |
| | | | | 3. செயலாற்றுகை கொடுப்பனவு மற்றும் தொழில்சார் கொடுப்பனவுகள். |
| | | | | 4. போக்குவரத்துக் கொடுப்பனவுகள். |
| 7. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப் புப் பணியகம் | 2025.02.27<br>மற்றும்<br>2025.05.23 | 2026.01.08<br>PS 435 | 1. வதிவிட பயிற்சிகள் வழங்கப்படாமல் வீட்டுப் பணிப் பெண்களை வெளிநாடு களுக்கு அனுப்புவதால் பணியகத்திற்கு நட்டம் ஏற்படுதல். |
| | | | | 2. வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு உத்தியோகத்தர்களை நியமித்தல். |
| | | | | 3. Glocal Fair (ஜயகமு ஸ்ரீ லங்கா) நிகழ்ச்சித்திட்டம் |
| | | | | 4. Glocal Fair (ஜயகமு ஸ்ரீ லங்கா) நிகழ்ச்சித்திட்டத்திற்கு கடைகள் பெற்றுக் கொள்ளுதல். |
| | | | | 5. “விகமனிக ஹரசர” நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல். |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | தேசிய சேமிப்பு வங்கி | 2025.11.19 மற்றும் 2025.11.26 | 2026.02.19 PS 476 | 1. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி (Bimputh Finance PLC) நிறுவனத்திற்கு கடன் வழங்குதல். |
| | | | | 2. ஆட்கள் இரண்டு பேருக்கு 2020 டிசம்பர் 23ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள ரூ.மி. 164.73 ஆன கூட்டாதனக் கடன். |
| | | | | 3. கடன் தகவல் பணியக அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள கடன் வசதிகள் 10 இன் முறையற்ற மீளச் செலுத்தலைக் கவனத்தில் கொள்ளாது கடன் வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூ.மி. 12.6 ஆன கடன் தொகை வழங்கப்பட்டமை. |
| | | | | 4. RPI Private Limited எனும் மாலைத்தீவு கம்பனிக்கு வங்கியினால் வழங்கப்பட்டுள்ள 9 மில்லியன்கள் பெறுமதியான ஐக்கிய அமெரிக்க டொலர் கூட்டுக்கடன். (Syndicate Loan) |

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 யூன் 15 ஆம் திகதிய 2493/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.07.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 யூன் 18 ஆம் திகதிய 2493/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.07.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*8.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

11.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

12.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஜூலை 21, செவ்வாய்க்கிழமை)**

1.

887/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலகத்தில் விண்ணப்பத்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம்மக்களுக்கு அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி உரிமம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

888/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு 'உருமய' அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை 'உருமய' அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

889/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' அல்லது 'காணி உரிமம்' இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் மக்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(v) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஜூலை 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

138/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யப்பான் அரசின் கடன் உதவித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த இலகுரக புகையிரதக் கருத்திட்டத்தை இரத்து செய்யத் தீர்மானிக்கப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படித் தீர்மானத்தை மேற்கொள்வதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படித் தீர்மானம் காரணமாக இலங்கை அரசுக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு;

(iv) அது தொடர்பாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதப்புரைகள் யாவை;

(v) மேற்படிக் கருத்திட்டம் தொடர்பிலான அரசின் நிலைப்பாடு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

469/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து,நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் பயன்பாட்டிலுள்ள புகையிரதப் பாதைகளையும் அவற்றின் நீளத்தை கிலோமீற்றரிலும் வெவ்வேறாகவும்;

(ii) இந்தப் புகையிரதப் பாதைகளின் பராமரிப்புக்கான வருடாந்த மொத்தச் செலவையும்;

(iii) மொத்த பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை யாதென்பதையும் அவர்களுக்கான சம்பளம் மற்றும் ஊதியம் ஆகியவற்றுக்கான வருடாந்த மொத்தச் செலவினம் யாதென்பதையும்;

(iv) கடந்த 05 வருடங்களில் ஒவ்வொரு வருடத்துக்குமான இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் மொத்த வருமானம், மொத்தச் செலவு மற்றும் அதன் விளைவாக ஈட்டப்பட்ட இலாபம் அல்லது ஏற்பட்ட நட்டம் ஆகியவற்றை வெவ்வேறாகவும்;

(v) புகையிரதப் பாதைகள் தனியார் துறையுடன் பகிரப்படுகிறதா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், சம்பந்தப்பட்டுள்ள தனியார் செயற்பாட்டாளர்கள் யார் என்பதையும் அத்தகைய புகையிரதப் பாதைகள் பகிரப்படுவதனால் ஈட்டப்பட்ட வருடாந்த வருமானத்தையும்;

(vii) திணைக்களத்தின் மொத்தச் சொத்துகளின் பெறுமதியையும்;

(viii) முன்மொழியப்பட்டுள்ள நவீனமயப்படுத்தும் திட்டங்களையும்;

(ix) வினைத்திறனை மேம்படுத்தி பணத்தின் பெறுமதிக்கு உரிய சேவையை வழங்குவதற்காக மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகளையும்;

(x) கடந்த 05 வருடங்களில் புகையிரதப் போக்குவரத்து மூலமாக ஒவ்வொரு வருடமும் ஈட்டப்பட்ட வருடாந்த வருமானத்தை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

783/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில வருடங்களுக்கு முன்பு, 104 எனும் வீதி இலக்கத்தைக் கொண்ட வத்தளை - பம்பலப்பிட்டிய வீதியில் பேருந்துச் சேவையொன்று இயங்கியதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) தற்போது மேற்படி பேருந்துச் சேவை இயங்காதிருப்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) ஜா - எல டிப்போவின் பேருந்தொன்றையும், இரத்மலானை டிப்போவின் பேருந்தொன்றையும் பயன்படுத்தி மேற்படி பேருந்துச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1192/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலகப் பிரிவில் வேலணைத்துறையிலிருந்து புங்குடுதீவு, மடத்துவெளி வரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலத்தின் நீளம் யாது;

(ii) மேற்படி பாலம் இறுதியாக புனரமைக்கப்பட்டுள்ள வருடம் மற்றும் இதற்கான நிதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள மூலம் யாவை;

(iii) மேற்படி பாலத்தை புனரமைப்பதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் ஊடாகப் பயணிப்பது மிகவும் ஆபத்தானது என்பதையும் விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்பதையும் அறிவாரா;

(ii) ஆமெனில், மேற்படி விபத்துக்கள் இடம்பெறுவதற்கான காரணங்கள் யாவை;

(iii) மேற்படி பாலம் முழுமையாக புனரமைப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1280/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் புகை உமிழ்வு சோதனையை மேற்கொள்வதற்காக, சபையின் டிப்போக்களில் புகை உமிழ்வு சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அந்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள டிப்போக்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி புகை உமிழ்வு சோதனை நிலையங்களை அமைப்பதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) இன்றளவில், அத்தகைய புகை உமிழ்வு சோதனை நிலையங்களினால் சேவைகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1376/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் மூலம் கண்டி மாவட்டத்திற்குள் பயணிகள் போக்குவரத்து மேற்கொள்ளப்பட வேண்டிய வீதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வீதிகளில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மூலம் பயணிகள் போக்குவரத்து மேற்கொள்ளப்படும் வீதிகளின் எண்ணிக்கை மற்றும் பயணிகள் போக்குவரத்து மேற்கொள்ளப்படாத வீதிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) பயணிகள் போக்குவரத்து மேற்கொள்ளப்படாத வீதிகளில் மேற்படி இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மூலம் பயணிகள் போக்குவரத்து மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) கண்டி மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துச் சேவைகளை முன்னேற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) கண்டி மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்களை அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1825/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை புகையிரதத் திணைக்களம் ஆகியவற்றினால் பராமரிப்புச் செய்யப்பட்டு வருகின்ற வீதிகள் மற்றும் புகையிரதப் பாதைகளில் ஒதுக்கப்பட்ட காணிகளை கையகப்படுத்தி சட்டவிரோத கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதை அறிவாரா;

(ii) மேற்படி கட்டடங்களை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) மேற்படி நிறுவனங்களினால் பராமரிப்புச் செய்யப்பட்டு வருகின்ற வீதிகளில் மழை நீர் வழிந்தோடுவதற்காக காணப்படுகின்ற கால்வாய்களை பராமரிப்புச் செய்யும் மற்றும் சுத்தம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் யாவை;

(iv) மழைநீர் வழிந்தோடுவதற்குள்ள கால்வாய்கள் தடைப்படுவதனால் ஏற்படுகின்ற வெள்ள நிலைமையைத் தடுப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டிய நிறுவனங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

8.

907/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முகத்துவாரம், ரஜமல்வத்த அரச மகப்பேற்று மருத்துவமனைக் கட்டடங்கள் தற்போது சேதமடைந்த நிலையில் உள்ளனவென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மருத்துவமனைக் கட்டடங்களையும் ஏனைய வசதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

908/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மன்றக் கல்லூரி நிறுவப்பட்டதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் மேற்படி நிறுவனத்திற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றளவில், மேற்படி நிறுவனமானது, அதன் ஆரம்ப நோக்கங்களிலிருந்து விலகி இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாறியுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1281/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில் வைத்திய அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தகைய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் கீழ் இயங்கும் தாய் சேய் கிளினிக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஒவ்வோர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கமைய தாபிக்கப்பட வேண்டிய தாய் சேய் கிளினிக்குகளின் எண்ணிக்கை கண்டறியப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த எண்ணிக்கை பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1658/2025

கௌரவ சானக மாதுகொட,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, மஹமோதர பழைய மகப்பேற்று வைத்தியசாலையின் மொத்த நிலப்பரப்பு யாது;

(ii) மேற்படி வைத்தியசாலை வளாகத்தில் தற்போது எஞ்சியுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்கள் யாவை;

(iii) இன்றளவில் மேற்படி வைத்தியசாலைக் கட்டடத்தில் சுகாதாரப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றனவா;

(iv) மேற்படி வளாகத்தை வேறு நடவடிக்கைக்காக பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றதா;

(v) ஆமெனில், அதற்கென திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கை யாது;

(vi) பழைய மஹமோதர மகப்பேற்று வைத்தியசாலையை விடவும் கராப்பிட்டிய 'ஹெல்முட் கோல் ஞாபகார்த்த மகப்பேற்று (போதனா) வைத்தியசாலை' மூலமாக வழங்கப்படுகின்ற சேவைகள் மற்றும் வசதிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1828/2026

கௌரவ லால் பிரேமநாத்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு ஓய்வூதிய முறையியலொன்றையும் காப்புறுதித் திட்டமொன்றையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஊடக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கோ அல்லது போக்குவரத்து வசதிகளை (மின்சார மோட்டார் சைக்கிள்கள்) வழங்குவதற்கோ, சலுகை வட்டி அடிப்படையில் கடன் திட்டமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) குறைந்தபட்சம் 10 ஆண்டுகால சேவைக்காலத்தை நிறைவுசெய்துள்ள, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு நிரந்தர சம்பள முறைமையொன்றை அல்லது முறையான கொடுப்பனவு முறையொன்றை ஏற்படுத்துவதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) செய்தி நிறுவனங்கள் 'செய்தியொன்றுக்குச் செலுத்தும் குறைந்தபட்ச கட்டணத்தை' உயர்த்துவதற்கும், ஊடக அடையாள அட்டைக்கு உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொடுப்பதற்கும் தலையீடுகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) இன்றேல், இவர்கள் முகம்கொடுக்கும் பொருளாதார சிக்கல்களைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் துரித நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

137/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் காணப்படுகின்ற சனாதிபதி மாளிகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் மேற்படி ஒவ்வொரு சனாதிபதி மாளிகையையும் பராமரிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி சனாதிபதி மாளிகைகள் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தப்படுமென தற்போதைய அரசாங்கத்தினால் கடந்த தேர்தல் காலத்தில் தெரிவிக்கப்பட்ட கூற்றுகளை யதார்த்தமாக்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

608/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒட்டுமொத்த பல்கலைக்கழக கட்டமைப்பிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளதும், இன்றளவில் சேவையில் உள்ள அத்துடன் வெற்றிடங்கள் காணப்படுகின்றதுமான விரிவுரையாளர் மற்றும் பேராசியர் பதவிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதிகப்படியான வெற்றிடங்கள் காணப்படுகின்ற கல்வித் துறைகள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய வெற்றிடங்கள் ஏற்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இவ்வெற்றிடங்கள் ஏற்பட்ட காரணத்தால் பல்கலைக்கழக கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் யாதென்பதையும்;

(v) அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1034/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை பல்கலைக்கழகக் கட்டமைப்பில் பகிடிவதை சம்பவங்கள் காரணமாக இறந்த மற்றும் காயமடைந்த மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பல்கலைக்கழகம் வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படிச் சம்பவங்கள் தொடர்பாக பல்கலைக்கழக மட்டத்தில் நியமிக்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அக்குழுக்களின் அறிக்கைகளுக்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) அரச பல்கலைக்கழகக் கட்டமைப்பில் நிகழும் மனிதாபிமானமற்ற பகிடிவதைகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

16.

1036/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையின் அரச பல்கலைக்கழகக் கட்டமைப்பில் கல்வி பயிலும் மாணவர்களில், மஹபொல மற்றும் மாணவர் உதவுதொகைக் கொடுப்பனவுகளைப் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி ஒவ்வொரு கொடுப்பனவு வகையின் கீழும் ஒரு மாணவருக்குக் கிடைக்கும் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொகைகளைச் சரியான முறையிலும் உரிய திகதியிலும் மாணவர்களுக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

17.

1883/2026

கௌரவ சுனில் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் கல்விமாணிப் பட்டமளிக்கும் அரசாங்க கல்வி நிறுவனங்கள் யாவை;

(ii) மேற்படி பட்டமளிப்பிற்கான அரச சார்பற்ற கல்வி நிறுவனங்கள் யாவை;

(iii) அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் கல்விமாணி பட்டமானது ஆசிரியர் சேவைக்கான ஆட்சேர்ப்பின்போது சமமானதாக கருதப்படுகின்றதா;

(iv) இன்றேல், ஏன்;

(v) அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் கல்விமாணிப் பட்டப்படிப்பிற்கான கற்கைநெறிக் காலப்பகுதியும் உள்ளடக்கமும் சமமானதா;

(vi) இன்றேல், ஏன்;

(vii) குறிப்பிட்ட நிறுவனங்களால் வழங்கப்படும் கல்விமாணிப் பட்டப்படிப்பிற்கான கற்கைநெறியில் செய்முறைக் கற்பித்தலுக்கான பயிற்சி கட்டாயமானதா;

(viii) ஆமெனில், அதற்கான காலப்பகுதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

18.

944/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாடு வாரியாக வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி தொழிலாளர்களில், அந்தந்த நாடுகளில் நடைமுறையில் உள்ள சமூக பாதுகாப்பு முறைமைகளில் பங்களிப்பு நல்குவோரின் எண்ணிக்கை யாது;

(iii) அவர்கள் தமது சேவைக் காலத்தை நிறைவு செய்து நாடு திரும்புகையில், மேற்படி பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளமை குறித்து அறிவாரா;

(iv) ஆமெனில், குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

19.

1527/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் மற்றும் நாயாறு கடல் நீரேரிகள், அவற்றைச் சுற்றியுள்ள ஈரநிலங்கள் மற்றும் பறவைகள் வாழிடங்கள் என்பன சூழலியல் சுற்றுலா வணிகத்தை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான சூழல் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அப்பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளுக்கான சூழல் நேயமிக்க தங்குமிடங்கள் (Eco-Hotels) உள்ளிட்ட சுற்றுலா வசதிகள் தொடர்பான தற்போதைய நிலை என்ன என்பதையும்;

(iii) அப்பகுதிகளை சூழலியல் சுற்றுலாத் தலங்களாக அபிவிருத்திசெய்து அதிகளவான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கானதொரு சாத்தியவள ஆய்வு அல்லது முதன்மைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) நிலைபேறான சூழலியல் சுற்றுலா வணிகத்தை மேம்படுத்துவதற்கும், அப்பகுதிகளில் காணப்படும் பல்லுயிர் பெருக்கம் மற்றும் இடம்பெயர் பறவைகளின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) சூழலியல் சுற்றுலா வழிகாட்டுதல், படகு சேவைகள் மற்றும் தங்குமிட வசதிகள் ஆகிய துறைகளில் பிரதேசத்தில் வாழும் மக்களை பயிற்றுவித்தல் உள்ளிட்ட, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதுமான வாழ்வாதார வாய்ப்புகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

20.

1924/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் புலம்பெயர் ஊழியர்களின் குடும்பங்களைச் சேர்ந்ததும் பாடசாலை செல்வதுமான பிள்ளைகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அந்தத் திட்டம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் அமுல்படுத்தப்படுகின்றதா;

(iv) பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டு சேவையாற்றி வருகின்ற வெளிநாட்டுச் சேவை அலுவலர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேற்படி அலுவலர்களால் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு 2-5, 6-10 மற்றும் 11-18 ஆகிய வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(vi) 2025 ஆம் ஆண்டுக்கென வழங்கப்பட்டுள்ள பாடசாலை உபகரணங்களின் அளவு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வழங்கப்படுகின்ற தரவுகளின் அடிப்படையில், மேற்படி தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை மேற்படி அ(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியம் உள்ளதா;

(ii) பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுதல் மறுக்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளனவா;

(iii) ஆமெனில், அது தொடர்பில் காணப்படுகின்ற அளவுகோல்கள் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) இன்றேல், ஏன்?

21.

2106/2026

கௌரவ (திருமதி) எம். ஏ. சீ. எஸ். சத்துரி கங்கானி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அமைச்சுக்குச் சொந்தமான வாடி வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வாடி வீடுகளின் காணிப் பரப்பளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வாடி வீடுகள் குத்தகை அடிப்படையில் எவ்வளவு காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iv) வாடி வீடுகளை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ளவர்கள் யாவரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெல்லவாய, எல்ல வீதியில் உள்ள வாடி வீடு துணைக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு துணைக் குத்தகைக்கு பெற்றுக்கொண்டவர் யாரென்பதையும்;

(iii) மேற்படி வாடி வீட்டை குத்தகைக்கு பெற்றுக்கொண்ட முதல் குத்தகைதாரர் அதில் இருந்த ஆதனங்களை முறைகேடான விதத்தில் பயன்படுத்தி 08 தேக்கு மரங்களை இரண்டு சந்தர்ப்பங்களில் எவ்வித அனுமதியும் இன்றி தரித்து விற்றுள்ளாரென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

22.

831/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை, இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளில் கருங்கல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி காலப்பகுதியில் அதற்கான காணி பயன்பாட்டுக் கட்டணமாக அறவிடப்பட்டுள்ள தொகை யாது;

(iii) மேலும், அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவைத் தொகை யாது;

(iv) குறித்த பணத் தொகையை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

23.

883/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் விபரங்கள் யாவை;

(iii) அம்மக்களுக்கு அளிப்பு உறுதி அல்லது காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கோரளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்பு உறுதி அல்லது காணி உரிமம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் விபரங்கள் யாவை;

(iii) அம்மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி உரிமம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

24.

885/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' அல்லது 'காணி உரிமம்' இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் ஆட்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்ந்தப்பட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(v) உரிய பிரதேச செயலாளரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்ந்தப்பட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

25.

945/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளை 'கையுதிர்த்தலாகாது' என்பதாகக் குறிப்பிட்டு சனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவரினால் ஆணைக்குழுவிற்கு கடிதம் அனுப்பப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி கடிதம் கிடைக்கப் பெற்றதன் பின்னரும் காணிகள் கையுதிர்க்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், அவ்வாறு கையுதிர்க்கப்பட்ட காணிகளின் அளவு யாது;

(iv) அவ்வாறு காணிகள் கையுதிர்க்கப்பட்டதற்கான காரணம் யாது;

(v) மேற்படி காணிகள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் யாவை;

(vi) ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளை முறையாக ஒழுங்குறுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

26.

1268/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின், இறக்காமம் பிரதேசச் செயலாளர் பிரிவின், நாவலடி வட்டை பிரதேசத்தில் 1986, 1989, 1991 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில், அம்மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரால் காணிக் கச்சேரியொன்று நடத்தப்பட்டு, காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம், அம்பாறை மாவட்டச் செயலகத்தின் ஊடாக 21 விவசாயிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டமையை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அம்பாறை மாவட்டச் செயலாளரின் பணிப்புரைக்கமைவாக, இறக்காமம் பிரதேச செயலாளரால், மேற்படி காணிகளில் கமத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமென கடந்த 30 வருடங்களாக கமத்தொழில் சார்ந்த மற்றும் மேட்டுநிலச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்ட 21 விவசாயிகளுக்கு அவ்வப்போது இடையூறுகள் விளைவிக்கப்பட்டமையை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி விவசாயிகளுக்குச் சொந்தமான காணிகளை இனங்கண்டு, அவற்றை மீண்டும் கையளிப்பதற்காக, அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் பிரதேசச் செயலாளர் மற்றும் இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டு, அப்பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மேற்படிக் காணிகள் கையளிக்கப்படுவதை தடுக்கும் விதமாக ஆட்கள் சிலர் இடையூறு விளைவித்துள்ளமையை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படிக் காணிகளை உரிய விவசாயிகளுக்கு மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

27.

1449/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீரேந்துப் பிரதேசங்களுக்கு அண்மையிலுள்ள வயற் காணிகளின் நீரில் உவர்ப்புத் தன்மை கலப்பதையும், பெரும்போகத்தின்போது வயற் காணிகளில் வெள்ள நீர் நிரம்புவதால் பயிர்கள் அழிவடைவதையும் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனைத் தடுப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு, பட்டிருப்பு பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத் திற்குரிய மகிழூர், பெரிய குளத்திற்கும் வயற்காணிகளுக்கிடையிலும், மண்டூர் 1 மற்றும் 2 வயற் காணிகளுக்கும், கங்கைக்கிடையிலும் உவர்நீர்த் தடுப்பணைகளை அமைப்பதன் மூலம் இரு போகங்களிலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு உவர் நீர்த் தடுப்பணைகளை அமைப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

28.

1758/2025

கௌரவ எம்.எஸ் அப்துல் வாஸித்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.01.01 ஆம் திகதி வரை பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உறுதிகளை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கையும் இவர்களின் பெயர்களும் யாவை என்பதையும்;

(ii) அத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியில் விண்ணப்பித்தவர்களுக்கு 'உருமய' உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையும் இவர்களின் பெயர்களும் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' உறுதிகளுக்கு விண்ணப்பித்த அதிகமானோருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கையும் இவர்களின் பெயர்களும் யாவை என்பதையும்;

(vi) அந்த நபர்களுக்கு இதுவரையும் குறித்த உறுதிகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

29.

1909/2026

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் கறுவா ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தற்போது கறுவாச் செய்கையில் ஈடுபட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கறுவா உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் கறுவாச் செய்கையை மேம்படுத்துவதற்கும் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

30.

1926/2026

கௌரவ ரீ. கே. ஜயசுந்தர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி மாவட்டத்தின் நாகொடை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள 'எப்தோப் தோட்டம்' அரசாங்கத்தின் காணி என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) அந்தக் காணி ஆரம்பத்திலிருந்து இது வரை உரித்து மாற்றம் செய்யப்பட்டுள்ள விதம் யாது;

(iii) மேற்படி காணியின் பரப்பளவு யாது;

(iv) மேற்படி காணியில், இன்றளவில் குடியிருப்பவர்களின் எண்ணிக்கை யாது;

(v) அத்தகைய குடியிருப்பாளர்கள் அனுபவிக்கும் காணியின் அளவு யாது;

(vi) காணியில் வசிக்காது, பயிர்ச்செய்கையை மட்டும் மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை யாது;

(vii) அத்தகைய நபர்கள் அனுபவிக்கும் காணியின் அளவு யாது;

(viii) மேற்படி காணியின் மாதிரி வரைபடத்தை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காணியினுள் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தால் அடையாளம் காணப்பட்டுள்ள ஆபத்தான வலயங்கள் காணப்படுகின்றனவா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

31.

1770/2025

கௌரவ லால் பிரேமநாத்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேயிலை பயிர்ச் செய்கைக்கான உரமானியம் வழங்கும்போது அறிமுகப்படுத்தப்பட்ட QR குறியீட்டு முறையினூடாக எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த வெற்றியினை உறுதிப்படுத்தும் தரவுகள் யாவை என்பதையும்;

(iii) தற்போது நடைமுறையிலுள்ள மேற்படி QR குறியீட்டு முறைமையில் காணப்படுகின்ற நடைமுறைச் சிக்கல்கள் யாவை என்பதையும்;

(iv) இந்த முறைமையை நடைமுறைப்படுத்துகின்ற போது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்பெறாத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்கான அடிப்படைக் காரணிகள் யாவை என்பதையும்;

(vi) உரத்தைப் பெற்றுக்கொள்கின்ற போது QR குறியீட்டு முறைமை காரணமாக பாதிக்கப்பட்ட தேயிலை பெருந்தோட்டத்துறையினருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள மாற்று வசதிகள் மற்றும் நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(vii) QR குறியீட்டு முறைமையை முன்னேற்றுவதற்கோ அல்லது மிகவும் பயனுறுதிமிக்க முறைமையாக முன்னெடுப்பதற்கோ ஏதிர்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளக்கூடிய துரித நடவடிக்கைகள் உள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

32.

1645/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுருக்கு வலை மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் படகுகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் தாமதம் நிலவுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி தாமதத்தின் காரணமாக குறிப்பிட்ட காலத்தில் மாத்திரமே பிடிக்கக் கூடிய மீன்களை பிடிக்க முடியாதுள்ளது என்பதையும்;

(iii) அனுமதிப் பத்திரங்களின்றி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்கள், அவர்களுடைய மீன்பிடி உபகரணங்கள் மற்றும் படகுகளுடன் கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள உத்தியோகத்தர்களினால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவதையும், அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுவதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) எதிர்காலத்தில் உரிய காலத்தில் அனுமதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

33.

1020/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புகள் இல்லாத குறையை நிவர்த்தி செய்வதற்கு பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணைந்த சேவைகள் பிரிவு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு ஆகியவற்றினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) பட்டப்படிப்புத் தகைமைகளுடன் சேவையில் இணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு (MN 4) வழங்கப்பட்டுள்ள முதன்மைப் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் யாவை என்பதையும்;

(iii) உயர்தரத் தகைமைகளுடன் சேவையில் இணைந்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு (MN 3) ஒதுக்கப்பட்டுள்ள குறிப்பான கடமைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

34.

1021/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நடைமுறையில், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு இடையிலான தொழில்சார் பணிகளில் நிலைபெற்ற வேறுபாடுகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய வேறுபாடுகள் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங் களுக்குள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு கட்டமைக்கப்பட்ட பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை நடைமுறையின் ஊடாக, வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு நியமிக்கப்படுவதற்கு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மாத்திரமே தகுதிபெறுகின்றார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக அத்தகையதொரு பொறிமுறை அறிமுகப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கு நிகராக, அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வாய்ப்புகள் உள்ளிட்ட சமமான தொழில்முறை மேம்பாட்டு வாய்ப்புகளை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

35.

2062/2026

கௌரவ ஜே. சீ. அலவத்துவல,— பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிருவாக சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய தகைமைகள் யாவை;

(ii) மேற்படி சேவைக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான முறைமை யாது;

(iii) மேற்படி சேவைக்கு உரிய பதவிப் பெயர்கள் யாவை;

(iv) நிருவாக சேவைக்கு உரிய பதவிகளை தற்போது வேறு சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் வகிப்பார்களாயின் அவ்வாறு வகிக்கின்ற பதவிகள் அல்லது பதிற்கடமையாற்றும் பதவிப் பெயர்களும் பணியிடங்களும் யாவை;

(v) நிருவாக சேவையை முறையான ஓர் அரச சேவையாக முன்னெடுத்துச் செல்வதற்காக, மேற்படி உத்தியோகத்தர்களை பொருத்தமான இடங்களில் அமர்த்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

36.

2109/2026

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார,— பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஓய்வூதியத் திணைக்களத்தில் தற்போதுள்ள பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி திணைக்களத்தின் தரவுகளின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019.12.31 ஆம் திகதியன்று, 2020.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரையிலும், 2025.01.01 ஆம் திகதி முதல் 2026.04.30 ஆம் திகதி வரையிலும் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறச் செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) ஒட்டுமொத்த அரச ஊழியர்களின் ஓய்வூதியம், மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீதமாக யாது;

(iii) 2025 வரவு செலவுத் திட்டத்தினால் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியங்கள் தற்போது அனைத்து ஓய்வூதியர்களுக்கும் உரித்தாக்கப்பட்டுள்ளதா;

(iv) இன்றேல், மேலும் செலுத்தப்படுவதற்குள்ள ஓய்வூதியர்களின் எண்ணிக்கை யாது;

(v) அவ்வாறு தாமதமடைவதற்கான காரணங்களும்,மேற்படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்கான காலப்பகுதிகளும் யாவை;

(vi) 2026 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வு பெறச் செய்யப்பட்டவர்களுக்கும் மேற்படி ஓய்வூதியத்தை அதிகரிப்பது ஏற்புடையதாக அமையுமா;

(vii) மேற்படி ஓய்வூதிய அதிகரிப்பின் மூலம் நிதிசார் நன்மைகளை அடைந்துகொள்ளாத ஓய்வூதியர்களின் எண்ணிக்கை யாது;

(viii) அவ்வாறு நிதிசார் நன்மைகள் அடையப்பெறாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

37.

2112/2026

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,— பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் மேலதிக பிரதேச செயலகங்கள் நிறுவப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) ஹங்குரன்கெத, வலப்பனை, கொத்மலை ஆகிய ஒவ்வொரு பிரதேசத்திலும் அண்ணளவாக 120,000 பேர் வதிகின்றனர் என்பதையும், அந்த மக்களுக்கு தேவையான சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு பிரதேச சபை வீதம் மட்டும் நிறுவப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(அ) (i) மேற்படி பகுதிகளில் குடித்தொகையின் அடிப்படையில் எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டு, 02 பிரதேச சபைகளை நிறுவுவதற்கான சாத்தியப்பாடு உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

38.

30/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கு நிலையிலுள்ள மாவட்ட கிரிக்கெட் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சங்கத்திலும் பணி புரியும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் ஊழியர்களின் சம்பள படிநிலைக்கும் மாவட்ட விளையாட்டு சங்கங்களின் ஊழியர்களின் சம்பள படிநிலைக்கும் இடையில் முரண்பாடுள்ளதை அறிவாரா;

(v) ஆமெனில், மேற்படி முரண்பாட்டை திருத்துவதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

39.

675/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் அடைந்துள்ள நட்டம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி நட்டத்துக்காக பொதுத் திறைசேரியினால் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(iii) ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் நட்டம் அடைந்த சந்தர்ப்பத்தில், மேற்படி நிறுவனத்தை தொடர்ந்தும் அரச நிறுவனமாக பேணிவருவதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதி யாது;

(iv) மேற்படி தீர்மானத்தை மேற்கொள்ளக் காரணமாக அமைந்த விடயங்கள் யாவை;

(v) மேற்படி நிறுவனத்தை ஒரு அரச நிறுவனமாக பேணிவருவதற்கு மேற்கொண்டுள்ள தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

40.

1106/2025

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2024.10.01 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை இலங்கைக்கு கிடைத்துள்ள நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் மொத்தப் பெறுமதி அமெரிக்க டொலர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அதனுடன் தொடர்புடைய முதலீட்டுக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய முதலீட்டு கருத்திட்டம் ஒவ்வொன்றினதும் தன்மை மற்றும் முதலீடு செய்துள்ள தொகை ஐக்கிய அமெரிக்க டொலர்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) அத்தகைய முதலீட்டு கருத்திட்டம் ஒவ்வொன்றும் ஆரம்பிக்கப்பட்ட திகதி/ ஆரம்பிக்கப்படும் திகதி, பூர்த்திசெய்யப்படும் திகதி மற்றும் ஒவ்வொரு கருத்திட்டத்தின் மூலமும் உருவாக்கப்படும் வேலைவாய்ப்புக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

41.

235/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘அரசியல் கைதி’ என்பதற்கு இலங்கை அரசின் பொருட்கோடல் யாது;

(ii) இன்றளவில் இலங்கை அரசினால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு அரசியல் கைதியினதும் பெயர் மற்றும் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் காலப்பகுதிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

42.

746/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இலங்கையை விட்டு வெளியேறியுள்ள சட்டத்துறை தலைமையதிபதி திணைக்கள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தில் தற்போது நிலவுகின்ற, விசேட திறமையுள்ள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறைக் காரணமாக, ஒரு உத்தியோகத்தர் சுமார் 200-300 கோப்புகளைக் கையாளுகிறார் என்பதையும்;

(iii) இதன் காரணமாக ஏற்பட்டுள்ள தாமதத்தைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

43.

1377/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதுள்ள பழக்கப்படுத்தப்பட்ட யானைகளினதும் கொம்பன் யானைகளினதும் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப்பழக்கப்படுத்தப்பட்ட யானைகள் மற்றும் கொம்பன் யானைகளும் அவற்றின் உரிமையாளர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

44.

1549/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யட்டியந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், பூணுகல – வேவெல்தலாவ பெருந்தோட்ட வீதிக்கு அண்மையில் வன ஒதுக்கமொன்று காணப்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வன ஒதுக்கத்தின் உயிர் பல்வகைத்தன்மை மற்றும் அதன் தனித்துவமான பண்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வன ஒதுக்கத்தில் சட்டவிரோத கட்டுமானமொன்று காணப்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி வன ஒதுக்கத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பெருந்தோட்டக் கம்பெனியும், பொலிஸாரும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி வன ஒதுக்கத்தைப் பாதுகாப்பதற்காக உரிய தோட்டக் கம்பெனியும், அரசாங்கமும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

45.

1963/2026

கௌரவ அஜித் கிஹான்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பரப்பு பாரிய அரிப்புக்குள்ளாகி வருவதையும்;

(ii) கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைக்கு படகு மற்றும் தோணி இறங்குதுறைகள் கடலரிப்பிற்குள்ளாகி உள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கடலரிப்பைத் தடுப்பதற்காகக் கல்வேலிகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கரையோரப் பாதுகாப்பிற்காகக் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்திற்குத் தேவையான இயந்திர சாதனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) தீவைச் சூழக் கடலரிப்பு ஏற்படுவதற்கான காரணங்களை, அறிவியல் ரீதியான தகவல்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

46.

2105/2026

கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு, — (1)

(அ) போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான ஆட்களுக்கு அரச அல்லது அங்கீகாரம் பெற்ற புனர்வாழ்வளிப்பு நிலையங்களால் வெற்றிகரமாக புனர்வாழ்வளிக்கப்பட்ட போதிலும் தொழில் கிடைக்காமை, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்குச் செல்லும் போது சிக்கல்களை எதிர்நோக்குதல், பொலிஸ் தடைநீக்கச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கல்கள், சமூகப் புறக்கணிப்பு என்பவற்றுடன் பாதுகாப்புப் பிரிவால் சந்தேகத்திற்கிடமான ஆட்களாகக் கருதப்படுதல் போன்ற காரணங்களால் மீண்டும் போதைப்பொருள் பாவனையின்பால் அல்லது குற்றச் செயல்களோடு சம்பந்தப்பட்ட வலையமைப்புகளின்பால் ஈர்க்கப்படும் ஒரு போக்கு காணப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தற்போது அமுலில் உள்ள அங்கீகாரம் பெற்ற புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையங்களால் சராசரி வருடாந்தம் புனர்வாழ்வளிக்கப்படுகின்ற ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஆட்களை புனர்வாழ்வளிப்புச் செயன்முறைக்கு ஆற்றுப்படுத்துவதற்கான முறைமைகள் யாவையென்பதையும்;

(iv) புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்பு மீண்டும் போதைப்பொருட்களைப் பாவிப்பதையும் குற்றச்செயல்களின்பால் ஈர்க்கப்படுதையும் தடுப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) உரிய புனர்வாழ்வளிப்புச் செயன்முறையொன்றைப் பூர்த்தி செய்வதன் மூலம் குறித்தவொரு நன்னடத்தைக் காலத்தைத் தொடர்ந்து சிறிய குற்றச்சாட்டுக்கள் உடைய ஆட்களை குற்றச்செயல் சார்ந்த குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவித்து பொலிஸ் தடைநீக்கச் சான்றிதழ்களை விநியோகிக்கும் முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு வாய்ப்புள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

47.

1355/2025

கௌரவ எம். எஸ். உதுமாலெப்பை,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரபுக் கல்லூரிகளைப் பதிவு செய்வதற்காக முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 130 விண்ணப்பங்களுக்கு கடந்த 04 வருடங்களாக குறித்த திணைக்களம் அனுமதி வழங்கவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி 130 அரபுக் கல்லூரிகளையும் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

48.

1666/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் மற்றும் சட்ட அலுவலர் பதவிகளுக்குத் தேவையான தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் கூட்டுத்தாபனத்தில் சட்ட அலுவலர் பதவியில் கடமையாற்றும் அலுவலர் மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

49.

2134/2026

கௌரவ கிட்ணன் செல்வராஜ்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கலாசார நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையங்களின் நிர்வாகக் கட்டமைப்பு (தலைவர், செயலாளர், பொருளாளர்) அமைக்கப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iii) மேற்படி நிலையங்களின் நிதிக் கூற்றுக்கள் (கணக்கறிக்கைகள்) வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iv) மேற்படி நிலையங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் தொழிற்படுகின்றனவா என்பதையும்;

(v) பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அமைந்துள்ள கலாசார நிலையங்கள் அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் தொழிற்படுகின்றனவா என்பதையும்;

(vi) 2025 ஆம் ஆண்டினுள் திணைக்களத்தின் ஊடாக அரசாங்கத்தினால் இந்து கலாசார நிலையங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

50.

1411/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்திற்கு —

(i) 2025 வரவு செலவுத் திட்டத்தினூடாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் குடிநீர்க் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) வழங்க எதிர்பார்க்கப்பட்ட புதிய நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2025.07.31ஆம் திகதியளவில் வழங்கப்பட்டுள்ள புதிய நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் திக்கோடை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட தும்பாலைக் கிராமம், சின்னவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட சின்னவத்தை மேற் பகுதி, புதுமுன்மாரிச்சோலை, பாலையடிவட்டை, கிழக்கு கண்ணபுரம், கண்ணபுரம், நெல்லிக்காடு மற்றும் மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவின் இலுப்படிச்சேனை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட சின்னக்காலப்போட்டமடு ஆகிய கிராமங்களுக்கு நீர் வழங்கல் சபையினால் நீர் இணைப்புக்கள் வழங்கப்படவில்லையென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கிராமங்களுக்கான நீர் இணைப்புக்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஜூலை 22, புதன்கிழமை)**

1.

890/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.01.01 திகதி தொடக்கம் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேசச் செயலாளர் பிரிவில், அரசாங்கத்தினால் 'அளிப்புப் பத்திரங்கள்' அல்லது 'காணி உரிமம்' பத்திரங்கள் ஊடாக வழங்கப்பட்ட அரச காணிகளில் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

891/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகத்தில் விண்ணப்பத்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி உரிமம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

892 /2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணபித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு 'உருமய' அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை 'உருமய' அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஜூலை 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1190/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி நகர மத்தியில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானத்தை நிர்மாணிக்கும் பணிகள் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு, இன்றளவிலும் அந்த மைதானம் விளையாட்டு வீர வீராங்கனைகளின் பயன்பாட்டுக்காக ஒப்படைக்கப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தை எந்த வகைப்பாட்டுக்கு உரிய விளையாட்டு மைதானமாக நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அந்த விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக, இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவு என்பதையும்;

(iv) கடந்த 10 ஆண்டுகளில், இந்நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(v) அந்த விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக இதுவரை ஒப்பந்தம் செய்துள்ள ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) தற்போது நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக அந்த மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு யாதென்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1526/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல கண்கவர் சுற்றுலாத் தலங்களைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டம், சுற்றுலாத் துறையில் வளர்ச்சி குன்றிய மாவட்டமாக காணப்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட விசேட கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில், வீதிகள், தங்குமிட வசதிகள், சுற்றுலா விடுதிகள் மற்றும் பார்வையாளர் மையங்கள் உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி மாவட்டத்தின் சுற்றுலாத் துறையில் தனியார் துறையினரின் முதலீட்டை ஊக்குவிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) முல்லைத்தீவு மாவட்டத்தின் இளைஞர், யுவதிகளை சுற்றுலா வழிகாட்டிகளாக, சூழலியல் சுற்றுலா வசதிகளை ஏற்பாடு செய்பவர்களாக அல்லது விருந்தோம்பல் துறையின் தொழில்வாண்மை மிக்கவர்களாக பயிற்சியளித்து பணியமர்த்துவதற்கு ஏதேனும் திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(vi) முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சில பிரதேசங்களை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் விசேட சுற்றுலா வலயங்களாக பிரகடனப்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1548/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யட்டியாந்தோட்டை பிரதேச செயலகப்பிரிவின், பூணுகலை தொடக்கம் வேவெல்தலாவை (வேவியதலாவை) வரையிலான வீதியின் நீளம் எத்தனை கிலோமீட்டர்கள் என்பதையும்;

(ii) அப்பாதையானது வாகன போக்குவரத்திற்கு மட்டுமின்றி நடைபயணத்தில் கூட செல்ல முடியாத நிலையில் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி வீதியின் பூணுகலை தொடக்கம் வேவெல்தலாவை வரையிலான பகுதியானது எந்த வருடத்திலிருந்து புனரமைக்கப்படாதுள்ளது என்பதையும்;

(iv) குறித்த வீதி புனரமைக்கப்படாமையானது வேவெல்தலாவை தோட்டத்தில் வசிப்பவர்களுக்கு தமது அன்றாட பணிகளை மேற்கொள்வதில் தடையாக இருக்கின்றது என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) மேற்படி வீதியை புனரமைப்பதற்கு இதுவரையில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) குறித்த வீதியை புனரமைப்பது தொடர்பில் உரிய பெருந்தோட்டக் கம்பனிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நிலவும் இணக்கப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1644/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் அரசாங்க பாடசாலைகளுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி மாவட்டத்தில் சேவையாற்றி வருகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(iv) தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாட வாரியாக வெவ்வேறாக யாது;

(v) மேற்படி வெற்றிடங்களை நிரப்ப மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1657/2025

கௌரவ சானக மாதுகொட,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதேச கறுவா அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி திணைக்களத்தினதும் பிரதேச அலுவலகங்களினதும் நிறுவனக் கட்டமைப்பு யாதென்பதையும்;

(iv) மேற்படி திணைக்களத்தைப் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நியதிச்சட்ட நிறுவனமாகத் தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) திணைக்களத்தின் வினைத்திறனுக்குத் தேவையான மனித வளங்கள் போதுமானதாக உள்ளனவா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்காக எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1756/2025

கௌரவ எம். எஸ். அப்துல் வாஸித்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணியற்றவர்களுக்கு காணிகளை வழங்கவும் மற்றும் அவ்வாறு வழங்கப்படும் காணிகளுக்கு காணி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குமாக 2008/4ஆம் இலக்கச் சுற்றறிக்கை நடைமுறையில் உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சுற்றறிக்கைக்கு அமைவாக பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் 1, 2, 3, 4 மற்றும் 5 கட்டங்களின் கீழ் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கியுள்ள புதிய காணி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கட்டங்களின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி சுற்றறிக்கைக்கு அமைவாக கடந்த 17 வருட காலப்பகுதியில் பொத்துவில் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள புதிய அனுமதிப்பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி சுற்றறிக்கைக்கு அமைவாக விண்ணப்பித்துள்ள போதிலும், இது வரையில் வழங்கப்படாதுள்ள காணி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) கிழக்கு மாகாண காணி நிர்ணயத் திணைக்களத்தால் விதந்துரைக்கப்பட்டு பொத்துவில் பிரதேச செயலகத்திற்கு ஆற்றுப்படுத்தியுள்ள போதிலும், இது வரையில் வழங்கப்படாதுள்ள அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) மேற்படி காணி அனுமதிப்பத்திரங்களை வழங்காது நிறுத்தி வைத்திருப்பதில் தாக்கம் செலுத்தியுள்ள காரணங்கள் யாவையென்பதையும்;

(vii) குறித்த அனுமதிப்பத்திரங்களை தகுதியானவர்களுக்கு மிகத் துரிதமாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1790/2025

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தமிழ்மொழி மூல பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அந்தப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்திற்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1824/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதுபானம் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் புனர்வாழ்வு பெறக்கூடியவாறு வட மாகாண சுகாதார அமைச்சின் கீழ் புனர்வாழ்வு நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், எந்தெந்த மாவட்டங்களில் இந்நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிலையங்கள் ஊடாக சேவைகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(iv) ஆமெனில், சேவை வழங்கப்படுகின்ற மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி நிலையங்களை செயற்படக்கூடிய நிலைக்கு கொண்டுவருவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1990/2026

கௌரவ திலிண சமரகோன்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டிகை காலத்தில் போதியளவு அரிசிக் கையிருப்புகளை சந்தைக்கு விடுவிக்கும் ஆற்றலுள்ளதா என்பதையும்;

(ii) அனைத்து அரிசி வகைகளின் கட்டுப்பாட்டு விலைகள், அரிசி வகைகளின் வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் மூலம் அரிசியை விநியோகிப்பதற்கு வகுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி அரிசி வகைகளின் நடப்பு விலைகள், அரிசி வகைகளின் வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நாட்டில் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் போதியளவு களஞ்சியப்படுத்தப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி உணவுப்பொருட்கள், தனியார் துறையால் மட்டும் இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) இன்றேல், அரச துறை அதில் தலையீடு செய்யும் விதம் யாதென்பதையும்;

(iv) அரிசி மற்றும் ஏனைய அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதில் நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரசபை போதியளவு தலையீடு செய்கின்றதா என்பதையும்;

(v) மேற்படி அதிகாரசபை, விலைக் கட்டுப்பாட்டில் தலையீடுசெய்யும் விதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2092/2026

கௌரவ சுனில் ராஜபக்ஷ,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள ‘கெமிதிரிய’ கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது இயங்கும் கம்பனிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் இயங்குகின்றதும் இயங்காததுமான கம்பனிகளின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள், நிதிச் சொத்துக்களின் பொறுப்பு யார் வசமுள்ளது என்பதையும்;

(iv) அத்தகைய கம்பனிகளில் சொத்துக்களும் கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுகின்றனவா;

(v) அவ்வாறாயின், அந்தக் கணக்காய்வுக்கான அதிகாரி யார் என்பதையும்;

(vi) மேற்படி கம்பனிகளது அலுவலர்களின் முறைகேடுகளுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஜூலை 23, வியாழக்கிழமை)**

1.

893/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' அல்லது 'காணி உரிமம்' இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் ஆட்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(v) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

894/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.01.01 திகதி தொடக்கம் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேசச் செயலாளர் பிரிவில், அரசாங்கத்தினால் 'அளிப்புப் பத்திரங்கள்' அல்லது 'காணி உரிமம்' ஊடாக வழங்கப்பட்ட அரச காணிகளில் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய தகவல்கள் என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

895/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் கோரளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலகத்தில் விண்ணப்பத்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கோரளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி உரிமம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஜூலை 24, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

29/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பால்மா இறக்குமதிக்காக பெருமளவு பணத்தொகை செலவு செய்யப்படுகிறது என்பதையும்;

(ii) பால் உற்பத்தியாளர்களை கட்டியெழுப்புவதன் மூலம் பாரிய பொருளாதார நன்மைகளை அடைந்துகொள்ள முடியும் என்பதுடன், மக்களின் சுகாதார நிலைமைகளையும் மேம்படுத்த முடியும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அன்றாட பால் தேவையில் எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பாலின் அளவு யாதென்பதையும்;

(ii) பால் உற்பத்தியாளர்களை கட்டியெழுப்புவதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவும் அரசாங்கம் ஏதேனும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

120/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சீனாவிலிருந்து சேதனப் பசளை இறக்குமதி செய்தமை தொடர்பாக கணக்காய்வு அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் சீன சேதனப் பசளையை இறக்குமதி செய்தமையால் ஏற்பட்டுள்ள நிதி இழப்பு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கணக்காய்வு அறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

658/2025

கௌரவ ரோஹண பண்டார,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின் எலயாபத்துவ பிரதேசத்தில் ஓட்டுத் தொழிற்சாலை ஒன்று உள்ளது என்பதையும்;

(ii) தற்போது அந்த ஓட்டுத் தொழிற்சாலை இயங்காத நிலையில் உள்ளதென்பதையும்;

(iii) அதன் காரணமாக, அந்தத் தொழிற்சாலையில் உள்ள பெறுமதிமிக்க இயந்திர உபகரணங்கள் பழுதடைந்து வருகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி தொழிற்சாலையை மீள இயங்கச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1413/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புதிய அஞ்சல் அலுவலகக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக அல்லது புனரமைப்பதற்காக இவ்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) கிரான் அஞ்சல் அலுவலகம் தனியார் கட்டடமொன்றில் இயங்குவதை அறிவாரா என்பதையும்;

(iii) கிரான் அஞ்சல் அலுவலகத்திற்கென புதிய கட்டடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செயலகப் பிரிவுக்குரிய மாவடிவேம்பு பிரதேசத்தில் அஞ்சல் அலுவலகமொன்று இல்லாத காரணத்தால் முதியோர்கள் மற்றும் விதவைகள் சித்தாண்டி உப அஞ்சல் அலுவலகத்திலிருந்தே அவர்களுடைய கொடுப்பனவுகளைப் பெறுகின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மாவடிவேம்பு பிரதேசத்தில் புதிய அஞ்சல் அலுவலகக் கட்டடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) உப அஞ்சல் அலுவலகமொன்றை அஞ்சல் அலுவலகமாகத் தரமுயர்த்துவதற்கு பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1889/2026

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில், நகர்ப்புறங்களுக்கு அப்பால் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் பெருமளவிலான அதிபர் வெற்றிடங்கள் காணப்படுவதால், நிர்வாக மற்றும் கல்வி நடவடிக்கைகளில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அம்பாறை மாவட்டத்தின் சில கரையோரக் கல்வி வலயங்களில் தகைமையுடைய அதிபர்கள் மேலதிகமாக இருக்கின்ற போதிலும், அதிபர்கள் நியமிக்கப்படாத பல பாடசாலைகள் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தேசிய கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு (SLEAS) புதிய உத்தியோகத்தர்களின் தேவைப்பாடு ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அச்சேவையின் உத்தியோகத்தர்களை அழைப்பதன் அவசியம் யாதென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களை கொள்கை உருவாக்கம், அமுலாக்கம் மற்றும் கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தக்கூடிய வகையில் அதிபர் கடமைகளிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

(iii) இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் அதிபர் சேவையின் உத்தியோகத்தர்களின் தொழில் வாய்ப்புகளை சமமான அடிப்படையில் முறைப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) தகைமையுள்ள அதிபர்களை தாமதமின்றி பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளுக்காக நியமிப்பதை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1980/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் 'உதவி உபகரணங்களுக்கு' இறக்குமதி வரியிலிருந்து விலக்களிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், விலக்களிக்கப்பட்டுள்ள சதவீதம் யாதென்பதையும்;

(iii) விலக்களிக்கப்பட்டுள்ள வரி வகைகள் மற்றும் உபகரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனிப்பட்ட பாவனைக்காக மாற்றுத்திறனுக்கு உகந்த வகையில் உற்பத்திச் செய்யப்பட்டுள்ள வாகனங்களை இறக்குமதிச் செய்யும்போது வரிச் சலுகை வழங்குவதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்ள பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் யாவையென்பதையும்;

(iii) அது தொடர்பான சட்டப் பின்னணி மற்றும் சுற்றுநிருபங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி உதவி உபகரணங்களை அல்லது வாகனங்களை இறக்குமதிச் செய்யும் விடயம் தொடர்பில் நடைமுறையிலுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் சட்டங்களில் யாதேனும் தடைகள் காணப்படுமாயின் அச்சட்டங்களைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) மாற்றுத்திறனாளிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் கிடைக்கப் பெறும் அல்லது அவர்களின் அமைப்புகளுக்கு வெளிநாடுகளிலிருந்து நன்கொடையாகக் கிடைக்கப் பெறும் உதவி உபகரணங்களுக்கும் ஏனைய பொருத்தமான வாகனங்களுக்கும் இறக்குமதி வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) நன்கொடையாகக் கிடைக்கப் பெறும் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் வாகனங்களுக்கு வரிச்சலுகை வழங்குவதற்கான இயலுமை காணப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2061/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச உத்தியோகத்தர்களின் திறமைகள், ஆற்றல்கள் மற்றும் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கு வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்கேற்ற அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, அவர்களது பெயர்கள் மற்றும் மேற்படி பயிற்சிக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளை அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கக் கூடியவாறு வழங்குவதற்கான முறைமையியலொன்றினைத் தயாரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

2093/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025 ஆம் ஆண்டிலிருந்து இது வரை கொழும்பு மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை தொடர்பாக பொலிஸ் காவலிலுள்ள 18 வயதுக்கு குறைவான சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் செயன்முறையொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்தச் செயன்முறை யாதென்பதையும்;

(iv) போதைப்பொருள் பாவனைக்கு பழகியுள்ள சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக நாட்டில் காணப்படும் நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அந்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) போதைப்பொருள் பாவனைக்கு பழகியுள்ள சிறுவர்களை நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்திய பின்னர், புனர்வாழ்வு நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் வரை நீண்ட காலமாக சிறுவர் தடுப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப் படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(vii) ஆமெனில், அவர்களை துரிதமாக புனர்வாழ்வுச் செயற்பாடுகளுக்கு அனுப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2095/2026

கௌரவ ருவன் மாபலகம,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள ஒன்பது மாகாண சபைகளின் தவிசாளர் பதவிகளை வகிக்கும் மக்கள் பிரதிநிதிகளின் சிறப்புரிமைகள் ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஏற்ப வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) மாகாண சபைகள் கலைக்கப்பட்டதன் பின்னர், மாகாண சபைத் தவிசாளர் பதவி இல்லாமல் போகாததற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பதவிக்கான சிறப்புரிமைகள் மற்றும் செலவிடப்படும் அரச செலவினங்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, மாகாண சபைகள் கலைக்கப்படும் போதே பதவியையும் இல்லாதொழிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

2101/2026

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள சாரதி பயிற்சிப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அரச தலையீட்டுடன் இயங்குகின்ற சாரதி பயிற்சி நிறுவகங்கள் உள்ளனவா என்பதையும்;

(iii) இலங்கை போக்குவரத்துச் சபையினால் செயற்படுத்தப்படுகின்ற சாரதி பயிற்சிப் பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்தில் உள்ள தனியார் மற்றும் அரச தலையீட்டுடன் இயங்குகின்ற சாரதி பயிற்சி நிறுவகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பொத்துஹெர பகுதியில் இலங்கை போக்குவரத்து சபையினால் செயற்படுத்தப் படுகின்ற சாரதி பயிற்சி நிறுவகமொன்று நிறுவப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி நிறுவகம், கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் ஈட்டியுள்ள வருமானம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஜூலை 24, வெள்ளிக்கிழமை)**

1.

2082/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் 2026 ஆம் ஆண்டின் முதல் 05 மாதங்களில் —

(i) பதிவாகிய மின் தடங்கல்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு மின் தடங்களும் நிலவிய காலவரையறை யாதென்பதையும்;

(iii) இதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் —

(i) சூரிய வலுசக்தி கட்டமைப்பு பொருத்தப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை பிரதேச செயலக வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி கட்டமைப்பை பொருத்துவதற்கு வழங்கப்படும் நிதயுதவி, கடன் மற்றும் ஊக்குவிப்புத்தொகை தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) 2026 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

(iv) தொடர்ச்சியான மின்விநியோகத்திற்கு ஏற்படும் தடங்கல்கள் காரணமாக கல்வி, சிறு கைத்தொழில் மற்றும் விவசாயத் துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மதிப்பிடப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) மின் இணைப்புகளை பெற்றுக்கொள்வதற்கு குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் உதவுத்தொகை அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில் பயனடைந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

2083/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மின்சார வசதியைக் கொண்டுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாகவும்;

(ii) மின்சார வசதி அற்றதும் மின்சார வசதி தேவைப்படுகின்றதுமான குடியிருப்புகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாகவும்;

(iii) முல்லைத் தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் மின்சார வசதி உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு வாரியாகவும்;

(iv) மேற்படி மாவட்டங்களில் மின்சார வசதி அற்றதும் மின்சார வசதி தேவைப்படுகின்றதுமான குடியிருப்புகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு வாரியாகவும்;

வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 05 வருட காலத்தினுள் மேற்படி அ(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில், புதிதாக மின்சார வசதி வழங்கப்பட்டுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி மாவட்டங்களில் குறுஞ்செய்திச் சேவை (SMS) மூலம் மின்சாரக் கட்டணப் பட்டியல்களைப் பெற்றுக்கொள்வதற்கு பதிவு செய்துகொண்டுள்ள மற்றும் பதிவு செய்யாதுள்ள மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை;

வெவ்வேறாக யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2026 ஆம் ஆண்டில் மேற்படி மாவட்டங்களில் மின்சார வசதிகளை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் யாவையென்பதையும்;

(ii) அம்மாவட்டங்களில் கிராமிய மற்றும் கஷ்டப் பிரதேசங்களுக்கான மின் இணைப்புகளை விரிவுபடுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

2117/2026

கௌரவ ரவி கருணாநாயக்க, — நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ‘ஜய இசுர’ நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மற்றும் மொத்தப் பெறுமதி யாதென்பதையும்;

(ii) 4%-5% சலுகை வட்டி மானியம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நன்மை பெற்றுக்கொண்ட பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் நன்மைகள் யாவை என்பதையும்;

(iv) பங்குபற்றுகின்ற வர்த்தக வங்கிகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்துடன் இணங்கிச் செயற்பட்டனவா என்பதையும், அமைச்சிலிருந்து பெறப்படவேண்டிய உரிய வட்டி மானியத்தைப் பெற்றுக்கொண்டனவா என்பதையும்;

(v) ஏனைய வர்த்தக வங்கிகள் ஊடாகத் தமது கடன்களைச் செலுத்தி முடித்த கடனாளிகள் தொடர்ந்தும் இந்த மானியத்தைப் பெறுவதற்குத் தகைமையுடையோராயிருந்தார்களா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், அது வழங்கப்பட்டதா என்பதையும்;

(vii) இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களுக்கும், இலக்கு வைக்கப்பட்ட பயனாளிகளால் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்மைகளுக்கும் இடையே ஏதேனும் வேறுபாடுகள் இருப்பதை அவர் அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019 ஏப்ரல் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சம்பத் வங்கி ஊடாக அங்கீகாரங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவற்றின் எண்ணிக்கை மற்றும் பெறுமதி யாதென்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட க்ளென்றொக் (பிறைவற்) லிமிட். நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் நிலை மற்றும், அது அங்கீகரிக்கப்பட்டிருப்பின், அதற்குரிய நன்மைகளை வழங்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

2121/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தற்போதைய செயலாளரின் பெயர் யாதென்பதையும்;

(ii) இவர் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அந்த பதவியை வகிப்பதற்கு இவருக்குள்ள கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அமைச்சின் தற்போதைய செயலாளர் —

(i) ஓர் இலங்கைப் பிரஜையா என்பதையும்;

(ii) இலங்கை குடியுரிமையை பிறப்பின் மூலம் அல்லது பதிவு செய்ததன் மூலம் பெற்றாரா என்பதையும்;

(iii) அவுஸ்திரேலியப் பிரஜையாக இருந்துள்ளாரா என்பதையும்;

(iv) இரட்டைக் குடியுரிமையை கொண்டிருந்தாரா என்பதையும்;

(v) அவுஸ்திரேலியக் குடியுரிமையை துறந்த திகதி யாதென்பதையும்;

(vi) அவுஸ்திரேலியக் குடியுரிமையை துறந்த பின்னர் மீள இலங்கை குடியுரிமையை பெற்றுள்ளாரா என்பதையும்;

(vii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கைப் பிரஜை அல்லாத ஒருவருக்கு அமைச்சு செயலாளர் பதவியை வகிக்க முடியாதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

2166/2026

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'திட்வா' சூறாவளியினால் சேதமடைந்த அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை;

(ii) மேற்படி பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதத்தின் தன்மை மற்றும் மதிப்பிடப்பட்ட சேதம்;

(iii) மேற்படி பாடசாலைகளின் சேதங்களைச் சீர்செய்வதற்கும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் இன்றளவில் அரசாங்கம், அமைச்சு, மாகாண சபைகள், வெளிநாட்டு உதவித் திட்டங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள்;

(iv) மேற்படி நிதி ஒதுக்கீடுகளின் மூலம் முழுமையாகப் புனரமைக்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை;

(v) இன்றளவில் முழுமையாகத் திருத்தப்படாத அல்லது புனரமைக்கப்படாத பாடசாலைகளின் எண்ணிக்கை;

மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) திருத்தப்படாத அல்லது புனரமைக்கப்படாத பாடசாலைகளைச் சீர்செய்வதற்குத் தேவையான மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஆகஸ்ட் 04, செவ்வாய்க்கிழமை)**

1.

896 /2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் கோரளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு 'உருமய' அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை 'உருமய' அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

897/2025

கௌரவ (கலாநிதி) எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' அல்லது 'காணி உரிமம்' இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், கோறளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் ஆட்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(v) உரிய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

2120/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறுவதற்கான வயதை 65 இலிருந்து 67 வரையும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறுவதற்கான வயதை 63 இலிருந்து 65 வரையும் நீடிப்பதற்கு அரசாங்கம் கொள்கைத் தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதற்கான அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு அமைச்சரவையினால் கொள்கைசார் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா;

(iii) அமைச்சர் அல்லது அமைச்சின் செயலாளர், அவ்வாறான சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளாரா;

(iv) உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வுபெறுவதற்கான வயதை நீடிப்பதை நியாயப்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2026 ஆகஸ்ட் 07, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 4/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி ,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா. 5/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா. 6/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 8/ 2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா. 9/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா.10/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா. 20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

14.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகள் பெற்றுத்தரல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச்சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமையை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

18.

பா. 41/2025

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

19.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா.48/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வருதல்,— மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு ஏற்புடைய சட்டங்கள் திருத்தப்படாத காரணத்தினால், 21 ஆண்டுகளுக்கும் அதிகமாக பெற்றோலியம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப்படாமலிருக்கும் நிலையை மாற்றுவதற்காக ஏற்புடைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

22.

பா.49/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா. 51/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகள் பீடத்தினைத் தாபித்தல்,— ஆசிரியர்களுக்குச் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்காகத் தேசிய மொழிகள் பீடம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா. 52/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— நுண் நிதிக் கடன்களைப் பெற்று அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— நுண் நிதிக் கடன்களைப் பெற்றுக் கொண்டவர்களுள் பெருமளவானவர்கள் தற்போது அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களாக இருப்பதனால், மேற்படி நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா. 53/2025

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், — மக்களுக்கு கேளிக்கையை அளிக்கும் பிரதான கைத்தொழில் துறையாகிய தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்காகவும் ஒழுங்குறுகை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா. 56/2025

கௌரவ உபுல் கித்சிறி,— உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— உடவளவை தேசியப் பூங்கா, உடவளவை யானைகள் சரணாலயம், சங்கபால ரஜமகா விகாரை, உடவளவை நீர்த்தேக்கம், செவனகல சீனித் தொழிற்சாலை, செவனகல கரும்பு ஆராய்ச்சி நிலையம், உடவளவை நன்னீர் மீன்பிடி நிலையம் மற்றும் வவுல்பன சுண்ணாம்புக்கல் குகை முதலிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் காணப்பட்ட போதிலும், முறையான ஒரு வேலைத்திட்டம் இன்மையாலும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவற்றின் பெறுமதியைக் கண்டுகளிக்க முடியாதிருப்பதாலும் இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவை மற்றும் மொனராகலை மாவட்டத்தின் செவனகல ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

27.

பா.57/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— “இலங்கை பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தைப் பூர்த்திசெய்யத் தேவையான ஒரு நிதியம் தற்சமயம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இல்லாமையினாலும், இவ்வாறான தேவைகளுக்காக “பைத்துல்மால்” என்ற பெயரிலான நிதியம் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பல ஆண்டுகாலமாக இயங்கிவருவதாலும், இலங்கையில் இவ்வாறானதொரு நிதியம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதாலும், முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் “இலங்கைப் பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

28.

பா. 62/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— புகையிரதப் பண்டப் போக்குவரத்தினை வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல்,— இலங்கையில் புகையிரதச் சேவையானது பண்டப் போக்குவரத்தினை முக்கிய நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையாலும், இன்றளவில் புகையிரதச் சேவை அந்நோக்கத்திலிருந்து விலகியுள்ளமையாலும், பண்டங்களை புகையிரதத்தில் ஏற்றிச் செல்வது செலவு குறைந்த முறையாகக் காணப்படுவதனாலும், இதன் நன்மைகள் நாட்டு மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கப் பெறுவதனாலும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் புகையிரதத்தின் மூலம் பண்டங்களையும், எரிபொருளையும் ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் உரிய வழிமுறையொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

29.

பா. 63/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— தமது உற்பத்திகளை விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியை குறைத்தல்,— தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யும்போது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையை நிர்ணயிப்பதால் இந்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாலும், இவ்வுற்பத்திகளை வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது கூடுதல் விலையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும், ஒரே நேரத்தில் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் அநீதி இழைக்கப்படுகின்ற இந்நடைமுறையை மாற்றியமைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயத்தை வழங்குவதற்காக அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

30.

பா. 64/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— முன்பள்ளிக் கல்வியை ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்குதல்,— தற்போது இலங்கையில் அமுலில் உள்ள அனைத்து கல்வி வாய்ப்புகளிலும் முன்பள்ளிக் கல்வி மிக முக்கியமானதும், தீர்க்கமானதுமாக காணப்படுவதால், இலங்கையின் முன்பள்ளிக் கல்வியை ஒரு நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

31.

பா. 65/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,— ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு விவசாய மற்றும் வேறு பொருட்களை உற்பத்திச் செய்கின்ற உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழைவதற்குப் போதுமானளவு வசதிகள், அறிவு மற்றும் நுழைவு வழிகள் இல்லாத காரணத்தினால், அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான அங்கங்களாகிய ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள இளம் முயற்சியாளர்களுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

32.

பா. 66/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— உயர்தரம் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத் துறைகளுக்கு இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்தல்,— இலங்கையின் பாடசாலைகளில் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடத் துறைகளில் உயர் கல்வி கற்கும் மாணவர்களின் இலக்கிய ரசனையை மேம்படுத்துவதற்காக குறித்த துறைகளுக்கு மேலதிகப் பாடமாக இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

33.

பா. 67/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளை பராமரித்தல்,— வைத்தியசாலையொன்றில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளின் அருகிலிருந்து நாள்முழுவதும் அவர்களைப் பராமரிப்பதற்காக பொறுப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென விடுதிக்கு பொறுப்பான அலுவலர் தெரிவிப்பதாலும், அவ்வாறு பராமரிப்பாளர் ஒருவர் இல்லாதபோது கட்டணம் செலுத்தி பராமரிப்பாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாலும், அத்தகைய பராமரிப்பாளர்கள் நாளொன்றுக்கு ரூ. 3,500 அறவிடுவதாலும், சில நாட்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெறவேண்டிய நிலை ஏற்படின் அச்செலவு பெருஞ்சுமையாக இருக்கும் என்பதாலும், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் பாதுகாப்பினையும் மற்றும் பராமரிப்பினையும், வைத்தியசாலையில் சேவையாற்றும் பராமரிப்பாளர்கள் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறை ஒன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

34.

பா. 68/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— காணி உரிமப் பத்திரங்களையுடையோருக்கு, நிரந்தரக் காணி அறுதி உறுதிப் பத்திரங்களை வழங்குதல்,— நாட்டு மக்களில் கணிசமானோர் தமது காணிகளுக்கு உரிமப் பத்திரங்கள் அல்லது ஸ்வர்ண பூமி போன்ற உறுதிகளையே கொண்டிருக்கின்றனர் என்பதால் அவர்களுக்குரிய உறுதிகளை வழங்குவதற்கு சரியான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

35.

பா. 71/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— நிலைபேறான இளைஞர் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் நிரந்தர விசேட பொருளாதார வலயம் ஒன்றினைத் தாபித்தல்,— ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயமொன்றினைத் தாபித்தலானது அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவதனாலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை ஈர்ப்பதனாலும் இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினை உருவாக்குவதனாலும், அவ்வாறான வலயங்களினைத் தாபிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் தொழிற்துறை விரிவாக்கத்தினை ஊக்குவிக்கவும், திறன் விருத்தியினை மேம்படுத்தவும் மற்றும் தொழில்முனைவினை ஊக்குவிக்கவும் முடியுமென்பதாலும், இதன்மூலம் வேலைவாய்ப்பின்மையினை நிவர்த்திசெய்து யாழ்ப்பாணத்திலும் வட மாகாணத்திலும் மற்றும் ஒட்டுமொத்த நாட்டிலும் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றத்தினை ஊக்குவிக்க முடியும் என்பதாலும், நாடு முழுவதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களினை உள்ளடக்கி, யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயம் (SEZ) தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

36.

பா.72/2025

கௌரவ கந்தசாமி பிரபு,— பால் உற்பத்தியில் தன்னிறைவினை ஊக்குவித்தல்,— நாடு தற்போது பால் இறக்குமதியில் தங்கியிருப்பது கணிசமான அந்நியச் செலாவணி இழப்புக்கு இட்டுச்செல்வதாலும், சிறந்த இன மாடுகளுக்கான, கால்நடைச் சேவைகளுக்கான, தீவனத்துக்கான மற்றும் உட்கட்டமைப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் போன்ற பிரச்சினைகளுக்கு விவசாயிகள் முகங்கொடுப்பதாலும், மேலும், இச்சவால்களைத் தீர்ப்பது உணவுப் பாதுகாப்பினை அதிகரித்து, கிராமியத் தொழில்களை உருவாக்கி, இறக்குமதிகளில் தங்கியிருத்தலைக் குறைப்பதாலும், சிறந்த இன மாடுகளுக்கான அணுகல் மற்றும் கால்நடைச் சேவைகளை மேம்படுத்துவதன் மூலமும் தீவனப் பயிர்ச்செய்கையை விரிவாக்குவதன் மூலமும் விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதன் மூலமும் பாற் பண்ணை விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலமும் அரச – தனியார் பங்காண்மைகளை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தி தொடர்பான ஆய்வினை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தியில் தன்னிறைவினை அடைவதற்காக அரசாங்கத்தினால் தேசிய பால் அபிவிருத்திக் கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பாலுற்பத்தியாளர் குழுக்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதற்காக ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டுமெனவும் பாராளுமன்றத்தின் சம்பந்தப்பட்ட குழு இதன் அமுல்படுத்தலைக் கண்காணித்து, மேலதிக நடவடிக்கைகளை விதந்துரைக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

37.

பா. 73/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்குச் சுகாதாரத்திற்கான மிகச் சிறந்த வாய்ப்புகளை வழங்குதல்,— சனத்தொகையில் பெரும்பான்மையானோர் திறந்த இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுகின்ற நிலையில், தனியார் துறை ஊழியர்களுக்கு 'ஊழியர் சேமலாப நிதியம்' மற்றும் 'ஊழியர் நம்பிக்கை நிதியம்' ஆகியவற்றுக்கூடாக இலவச வசதிகள் வழங்கப்படும் வகையிலும் அரசாங்க ஊழியர்களுக்கு அல்லது ஊழியரல்லாதோருக்கு அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தில் இருந்து செலவுக்கான முழுத் தொகையும் வழங்கப்படும் வகையிலும் அனைத்து இலங்கையர்களுக்கும் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாரளுமன்றம் பிரேரிக்கின்றது.

38.

பா.74/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாரத்தின் கடமை நாட்களில் பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை துரிதமாக நடைமுறைப்படுத்தல்,— பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக, காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

39.

பா. 75/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தை இற்றைப்படுத்தல்,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையர்களுக்கு ஏராளமான நன்மைகள் கிடைப்பதனால், அந்த ஒப்பந்தத்தை மீண்டும் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

40.

பா. 76/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— சூட்டிகை வலுசக்திக் கட்டமைப்பையும் சூட்டிகை மின் மானிகளையும் அறிமுகம் செய்தல்,— ஒரு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வடிவமாக சூரிய மின்சக்தி பெறப்படுவதை ஊக்குவித்தல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றபோதும் குறிப்பாக, கூரைகளில் பொருத்தப்படுகின்ற சூரியப் படல்களால் பிறப்பிக்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவை முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தால் வேறுபடுத்திக் கண்டறிய முடியாததால் தேசிய மின்சாரக் கட்டமைப்பை (Grid) சூட்டிகை நிலைக்கு (Smart Grid) கொண்டு வரவும் சூட்டிகை மின் மானிகளை (Smart Meters) அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

41.

பா.77/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— உணவுகளை சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தீங்கு விளைவிக்கும் செயற்கைச் சுவையூட்டிகளைத் தடைசெய்தல்,— இந்த நாட்டிலுள்ள உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களில் ரைஸ், கொத்து மற்றும் நூடில்ஸ் போன்ற உணவுகளைச் சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை சுவையூட்டிகள் பல்வேறுபட்ட தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றதென கூறப்படுவதால் அது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஊடாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தீங்கு விளைவிக்கும் சுவையூட்டிகளைத் தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

42.

பா. 78/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல் அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல்,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரையான புகையிரதப் பாதை மற்றும் மாத்தறையிலிருந்து கல்முனை வரையான புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதன் மூலம் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவிலான மக்களுக்கு பயன் கிடைப்பதனால், மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

43.

பா. 79/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— நீர்த்தாமரை செடியின் பரவலை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழித்தல்,— நீர்த்தாமரை அல்லது Eichhornia crassipes (Mart.) Solms என்ற அறிவியல் பெயர்கொண்டு அழைக்கப்படும் ஆக்கிரமிப்புத் தாவரம், தற்போது விவசாய நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் முழுவதுமாக பரவிச் சென்றுள்ளதாலும், இதன் துரித வளர்ச்சி வேகத்தின் காரணமாக உள்நாட்டுத் தாவரங்களையும் விஞ்சி உயிரியல் சூழல் தொகுதிக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாலும், இதன் விளைவாக வண்டல் மண் படிந்து நீர் வழிப் பாதைகள் மற்றும் நீர் வழிந்தோடல் என்பன தடைப்படுவதனூடாக வெள்ளப் பெருக்கு நிலைமைகள் ஏற்படுவதாலும், அன்றாட பாவனைக்கு அவசியமான நீரின் தரம் மாசடைவதாலும் நீர் மின்னுற்பத்திக்கு தடையாக அமைந்துள்ளதாலும், இரசாயன களைக்கொல்லிப் பயன்பாட்டினூடாக அவற்றை அழித்தல், அந்நீரைப் பயன்படுத்தும் நபர்களுக்கு சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்துவதாலும், இதன் விளைவாக ஏற்படும் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்தின் காரணமாக யானைக்கால் நோய் மற்றும் டெங்கு நோய் போன்றவை பரவி வருவதாலும், இத்தாவரத்தை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழிப்பதனூடாக நிலையான தீர்வினை வழங்கும் பொருட்டு அரசாங்கத்தினால் அதற்கேதுவான கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் காலோசிதமானதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

44.

பா. 80/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை தகனம் செய்தமை தொடர்பாக விசாரிப்பதற்கு ஆணைக்குழுவொன்றை நியமித்தல்,— கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதல்களுக்கு முரணாக ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் தகனம் செய்யப்பட்ட முஸ்லீம் மக்களின் ஜனாஸாக்களின் எண்ணிக்கை, அவ்வாறு தகனம் செய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள் போன்ற தகவல்களை விசாரிப்பதற்கும், இறந்தவர்களின் ஜனாஸாக்களை இவ்வாறு வலுக்கட்டாயமாகத் தகனம் செய்தமைக்கு ஏதுவான பின்னணி மற்றும் வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்படவர்களின் உறவினர்களின் மனநிலை தொடர்பாக விசாரணை செய்வதற்கும், இதற்கு உடந்தையாக இருந்து வழிகாட்டுதல் களுக்கு முரணாகச் செயற்பட்ட அரசியல்வாதிகள் உள்ளிட்ட அரசாங்க அலுவலர்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கும், ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

45.

பா.81/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி பழங்களைப் பழுக்க வைப்பதைத் தடுப்பதற்கான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பழச்சந்தையில் இயற்கையாகப் பழுத்த பழங்களுக்குப் பதிலாக, இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி அவற்றை செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இறக்குமதி செய்யப்படும் பழங்களையும் இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இப்பழங்களை பிள்ளைகள் அதிகம் உட்கொள்வதாலும், நேர்மையற்ற வணிகர்கள் இலாபம் ஈட்டும் நோக்கத்தில் நாட்டின் எதிர்காலத்தை அழிவுக்குட்படுத்தி மேற்கொண்டுவரும் இச்செயற்பாட்டை நிறுத்துவதற்கு உரிய வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

46.

பா. 82/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான அளவுகோலாக பிரதான செயலாற்றுகைச் சுட்டியை பயன்படுத்துவதற்கான வழிமுறையை தயாரித்தல்,— அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை நியமிப்பதில் மூப்புரிமையை கவனத்திற்கொள்வது போன்றே அவர்களின் பிரதான செயலாற்றுகைச் சுட்டியை (KPI - Key Performance Indicator) ஒரு அளவுகோலாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறையொன்றை அரச சேவையில் பயன்பாட்டிற்கு கொண்டுவந்து அதற்கேற்ப நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

47.

பா. 83/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது பிரதான செயலாற்றுகைச் சுட்டியைக் கவனத்திற் கொள்ளுதல்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் முக்கிய செயலாற்றுகைச் சுட்டியை (KPI -Key Performance Indicator ) வருடாந்தம் மதிப்பாய்வு செய்து அவர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது அத்தகைய சுட்டிகளைப் கவனத்திற் கொண்டு பதவிகளை வழங்கும் முறையியலொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

48.

பா. 84/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களை வேறு பதவிகளுக்கு நியமிக்கும்போது அவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்தல்,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்கள் அப்பதவிகளை வகித்த காலம் நிறைவடைந்த நாளிலிருந்து குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு அரச சேவை, நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், நியாய சபைகள் அல்லது வெளிநாட்டு சேவை (தூதுவர்கள் போன்ற) ஆகியவற்றின் பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

49.

பா. 86/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்குரித்தான சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப் பத்திரங்களை தமது கட்சியின் நிதியத்தில் வைப்பிலிடுவதை நிறுத்துதல்,— அரசியல் கட்சிகள் தமது கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை அத்தகைய அரசியல் கட்சிகளுக்கே மீளப் பெற்றுக்கொள்வதானது மக்கள் பிரதிநிதிகள் தங்களது சுயாதீனதன்மையை இழக்கின்றதொரு செயற்பாடாகும் என்பதாலும், இது சனநாயகத்திற்கு கடும் சவாலாக கருதப்படுவதனாலும், இவ்வாறு அரசியல் கட்சிகளினால் மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை தமது நிதியத்தில் வைப்பிலிடுதல் கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

50.

பா. 87/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் புனர்வாழ்வளிக்கும் நிலையத்தைத் தாபித்தல்,— இன்றளவில் ஹெரோயின் போன்ற போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு காணப்படுவதாலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் குறித்த ஒரு பிரதேசத்தில் மாத்திரமன்றி நாடெங்கிலும் பரந்து காணப்படுவதாலும் இவர்களின் ஊடாக இவ்விடயம் மேலும் பரவி வருவதாலும், போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையங்கள் நாட்டின் ஒருசில பிரதேசங்களில் மாத்திரம் காணப்படுவதானது போதைப் பொருள் பாவனையாளர்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது பாரிய பிரச்சினையாக மாறியிருப்பதாலும், அதற்கு தீர்வினை வழங்கும் பொருட்டு குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு புனர்வாழ்வளிப்பு நிலையமேனும் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

51.

பா. 88/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையில் வன விலங்குகளை முகாமைத்துவம் செய்வதற்கு தேசியக் கொள்கையொன்றையும் செயன்முறையொன்றையும் வகுத்தல்,— இலங்கை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உயிரியல் பல்வகைமை நிறைந்த ஒரு நாடாக கருதப்படுவதாலும், காடழிப்பு, மனிதர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக சட்ட விரோத வன விலங்கு வர்த்தகம், மனிதர்களுக்கும் வன விலங்குகளுக்குமிடையே அதிகரித்து வரும் மோதல்கள் காரணத்தினால் வருடாந்தம் வன விலங்குகளினதும் மனித உயிர்களினதும் இழப்பு பெருமளவில் இடம்பெறுவதாலும், புதிய கொள்கைகள் மற்றும் திட்டங்களின் மூலம் தேசிய வன விலங்குகள் முகாமைத்துவக் கொள்கையொன்றை வகுத்தல் நிலைபேறான அபிவிருத்தி நோக்கமாக இருப்பதாலும், அதன் மூலம் விலங்குகளின் வாழ்விடங்கள் பாதுகாக்கப்படல், மனிதனுக்கும் வன விலங்குகளுக்கும் இடையிலான மோதல்கள் குறைவடைதல் உள்ளடங்கலாக விவசாயிகளின் பொருளாதார நிலையும் சமூக வாழ்க்கைத் தரமும் மேம்படுவதாலும், அதன் பொருட்டு செயற்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான நவீன கொள்கையொன்றையும் செயன்முறையொன்றையும் வகுத்து செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

52.

பா. 89/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையின் விவசாய நிலங்களை மிகவும் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துதல்,— இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியத்துவமிக்க ஒரு துறையாக விவசாயத் துறை காணப்படுவதனாலும், விவசாய நிலங்களில் சுமார் 40 %மாத்திரம் வருடாந்த உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படுவதனாலும், எஞ்சிய நிலங்கள் உரிய முறையில் திட்டமிடப்படாமை, நீர் வளப் பற்றாக்குறை, தொழிநுட்ப அறிவின்மை மற்றும் நவீனமயப்படுத்தப்படாமை ஆகியன காரணமாக பயன்படுத்தப் படாமையினாலும் உற்பத்திகளின் அளவு குறைவடைவதனால் வருடாந்தம் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது பாரிய பணத்தொகை செலவிடப்படுவதனாலும், விவசாய உற்பத்திகளின் வளர்ச்சியை எதிர்வரும் ஒரு சில வருடங்களில் 30% இனால் அதிகரிப்பதற்கும், இதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், வணிக விவசாயத்தின் பரவலாக்கத்தை அதிகரிப்பதற்கும் வழிசமைக்கும் வகையில் சகல விவசாய நிலங்களையும் ஆய்வு செய்து நிலத்தின் வகை, பயிர்களுக்கு உகந்தநிலை, நீர் மற்றும் பயிர்ச்செய்கை பற்றிய தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை தரவுத் தொகுப்பொன்றை அமைப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமாக நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

53.

பா. 90/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள தீவுகளில் வாழும் மக்களுக்கான கடற் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பாகப் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் வாழும் மக்கள் பல தசாப்தங்களாகப் போதிய கடற் போக்குவரத்து வசதிகள் கிடைக்காதவர்களாக இருப்பதாலும், அதன் விளைவாக, அவர்கள் பல மணித்தியாலங்களைக் கடற் பயணத்தில் செலவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதாலும், இவ்வாறான நிலைமையில் நோயாளிகள், கர்ப்பிணிகள், முதியவர்கள், பாடசாலைப் பணியாளர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி இப்பயணத்தின் போது பல அபாயநேர்வுகளை எதிர்கொள்வதாலும் “கிராமமொன்றின் அபிவிருத்தி என்பது ஒரு தேசத்தின் அபிவிருத்தியாகும்” என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்பதாலும் அம்மக்களுக்களுக்காக நவீன, பாதுகாப்பான, துரிதமான மற்றும் நம்பகமான கடற் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

54.

பா. 91/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— தலைமன்னார் — ராமேஷ்வரம் படகுச் சேவையினை ஆரம்பித்தல்,— தலைமன்னார் - ராமேஷ்வரம் படகுச் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்க முடியும் என்பதாலும், இதன் மூலம் பொதுமக்கள் குறைந்த செலவில் தமிழ்நாட்டுக்குப் பயணித்து, அமுலிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு நியாயமான விலைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்து அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதை இது இயலுமாக்கும் என்பதாலும் தலைமன்னாருக்கும் ராமேஷ்வரத்திற்கும் இடையிலான படகுச் சேவையினை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

55.

பா. 93/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— அபிவிருத்தியில் நிலவும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு தனியானதொரு விசேட அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல்,— வட மாகாணம், கிழக்கு மாகாணம், மொனராகல மாவட்டம் மற்றும் நுவரெலியா மாவட்டம் போன்ற பின்தங்கிய பிராந்தியங்கள் நீடித்து நிலவிய சிவில் முரண்பாடுகளின் தாக்கங்களாலும் வரலாற்று ரீதியான புறக்கணிப்புக்களாலும் தொடர்ந்தும் பல தசாப்தங்களாக கடுமையான பொருளாதார இழப்புக்களுக்கு முகங்கொடுத்து வருவதாலும்; தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் இப்பின்தங்கிய பிராந்தியங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரங்கள் மீது பாரபட்சமான சுமைகள் திணிக்கப்பட்டுள்ளதால் இந்த ஏற்றத்தாழ்வுகள் மேலும் உக்கிரமடைந்துள்ளதாலும்; பொருளாதார ரீதியில் பின்னடைந்த இந்தப் பிரதேசங்களில் ஒப்புரவுமிக்க வளர்ச்சியையும், நிலைபெறுதகு அபிவிருத்தியையும் பால்நிலை வலுவூட்டலையும் மேம்படுத்தும் குறிக்கோளுடன் இக்கரிசனைக்குரிய விடயங்களை நிவர்த்தி செய்வதற்கென தனியானதொரு தேசிய முன்னெடுப்பினைத் தாபிப்பது அவசியமாக இருப்பதாலும்; 250 மில்லியன் டொலர் தொகையினை இலக்காகக் கொண்டு, 10+2 ஆண்டு காலப்பகுதியிலான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அரசாங்கத்திடமிருந்தும் இருதரப்பு மற்றும் பல்தரப்புப் பங்காளர்களிடமிருந்தும் தனியார் முதலீட்டாளர்களிடமிருந்தும் மனிதாபிமானக் கொடையாளர்களிடமிருந்தும் கிடைக்கின்ற பங்களிப்புகளைத் திரட்டுவதற்கு ஒரு தேசிய அபிவிருத்தி நிதியத்தைத் தாபிப்பதற்கும்; அந்த நிதியினை விவசாயம், மீன்பிடி, மற்றும் குடிசைக் கைத்தொழில் என்பவற்றின் மூலம் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தைப் புத்துயிர்ப்பிப்பதற்கும், தொழில் வாய்ப்பையும் மற்றும் பெண்களின் சமூகப்-பொருளாதார ஊக்குவிப்பையும் மேம்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதியை அபிவிருத்தி செய்வதற்கும், முடங்கிக் கிடக்கும் சொத்துக்களை செயலூக்கப்படுத்தி அவற்றை மீளப்பயன்படுத்துவதற்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகள் (SME) மற்றும் கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியவற்றுக்கு உதவுவதற்கும், மீள்புதுப்பிக்கத்தகு சக்தியிலும் மற்றும் ஏனைய வணிக ரீதியில் சாத்தியமான கூட்டுத் தொழில்முயற்சிகளிலும் முதலிடுவதற்கும், திறன் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் மற்றும் இளைஞர் யுவதிகளுக்குக் கல்வி கற்பிக்கப் பயன்படுத்தவும்; உள்ளூர் திறனாற்றலை கட்டியெழுப்புவதற்காக முதலீடுகளிலுள்ள சாத்தியமான இடைவெளிகளை ஒழித்தல், நிதிகளின் பயனுள்ள மற்றும் வெளிப்படைத் தன்மைமிக்க பயன்பாடு ஆகியவற்றினை உறுதிப்படுத்தி, தொழில்நுட்ப உதவி வசதியைத் (TAF) தாபிக்க உதவுவதற்கும்; பொருளாதாரச் செயற்பாடுகளிலும் தீர்மானமெடுத்தல் விடயங்களிலும் பெண்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கு அளவிடக்கூடிய இலக்குகளைக் கொண்டு சகல முதலீட்டுத் துறைகளிலும் பால்நிலையின் உள்ளடக்கும்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கும்; இலங்கையின் பிரத்தியேகமான அபிவிருத்தி, நல்லிணக்கம், நிலைபெறுதகு அபிவிருத்தி என்பவற்றுக்கான ஒரு அவசர தேசிய நடவடிக்கையாக அந்த நிதியம் தாபிக்கப்படுவதைக் கருத்திற்கொள்வதன் மூலம் கருத்திட்டச் செயற்படுத்துகையில் ஒப்புரவுமிக்க பிராந்திய உள்ளடக்கம், வகைப்பொறுப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் நிதியத்தை ஒருங்கிணைக்கக்கூடிய விதத்தில் அந்தந்த அமைச்சுக்களுக்கும் மாகாண சபைகளுக்கும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கும் அதிகாரமளிப்பதற்கும் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

56.

பா. 94/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கண்டல் தாவர சூழல்தொகுதியை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— சுற்றுச்சூழல் சமநிலைக்கும் கடற்றொழிலுக்கும் மிக முக்கியமானதாக அமையும் கண்டல் தாவர சூழல்தொகுதியைப் பாதுகாக்கும் பொருட்டு வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

57.

பா. 95/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்துதல்,— மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் தனியார் பேருந்துகளுக்கு உரிமங்களை வழங்கும் பொருட்டு பின்பற்றப்படும் நடைமுறை பெருமளவு ஊழல் நிறைந்ததாக மாறியிருப்பதனால், அந்நிலைமையை தடுப்பதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

58.

பா. 97/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— இலங்கையில் குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக குடும்பங்களுக்கு ஊக்குவிப்புத் தொகையை வழங்குதல்,— 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையின் வருடாந்த குழந்தை பிறப்பு எண்ணிக்கை தொடர்ச்சியாக விழ்ச்சியடைந்து வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளதாலும் இதனால் எதிர்காலத்தில் இலங்கையில் இளைஞர் சனத்தொகை நிச்சயமாக வீழ்ச்சியடையக் கூடிய வாய்ப்பு உள்ளதாலும் இளைஞர் சனத்தொகை இவ்வாறு வீழ்ச்சியடையும்போது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் பாதகமான தாக்கங்கள் ஏற்படக் கூடும் என்பதாலும் இலங்கையில் குழந்தை பிறப்பு எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக குடும்ப அலகுகளை கவரக்கூடிய ஊக்குவிப்புத் தொகையை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

59.

பா. 98/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'சூர்யபல சங்ராமய' கருத்திட்டத்தை மேம்படுத்துதல்,— இலங்கையில் செலவு குறைந்த மற்றும் சுற்றுச்சூழல் நேயமிக்க வலுசக்தி மூலாதாரமாக சூரிய மின்சக்தி அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், 2016.09.06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'சூர்யபல சங்ராமய' (Battle for Solar Energy) கருத்திட்டத்தின் மூலமாக தற்பொழுது 2000 இற்கும் அதிகமான மெகாவொட் சூரிய மின்சக்தி தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாலும், மின்சார அலகொன்றிற்கான விலையைக் குறைப்பதற்கான முறையியலாகவும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான மூலோபாயத் திட்டமாகவும், 'சூர்யபல சங்ராமய' கருத்திட்டத்தை மேலும் மேம்படுத்தி பாதுகாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

60.

பா. 99/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'களுத்துறை கடற்கரை வலயத்தை' விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தல்,— களுத்துறை நகரத்தை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா வலயமொன்றை அபிவிருத்தி செய்வதற்காகவும், களுகங்கையின் கழிமுகத்தையும் கடற்கரையையும் பாதுகாக்கும் உத்தியாகவும், கெலிடோ கடற்கரை மற்றும் களுகங்கையின் கழிமுகம் மாறியதன் காரணமாக புதிதாக உருவாகியுள்ள மேட்டுநிலம் உட்பட 'களுத்துறை கடற்கரை வலயத்தை' விசேட பொருளாதார வலயமாக மேம்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

61.

பா. 100/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— 'மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயம்' நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தல்,— களுத்துறை மாவட்டத்தில், 'மில்லனிய ஏற்றுமதி செயலாக்க வலயத்தை' (Millaniya Export Processing Zone) நிர்மாணிப்பதற்குத் தேவையான 240 ஏக்கர் காணி ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டுள்ளதாலும், அக்கருத்திட்டத்திற்காக அதிவேக நெடுஞ்சாலை நுழைவு வழிகள், குழாய் நீர் மற்றும் மின்சாரத்தை வழங்குவதற்காக அரசாங்கம் இன்றளவில் சுமார் ஒரு பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளதாலும், மேற்படி ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட காணி மிகப் பொருத்தமானதென இலங்கை முதலீட்டுச் சபை இனங்கண்டுள்ளதாலும், அந்த ஏற்றுமதி செயலாக்க வலயத்தை நிர்மாணிப்பதனை அரசாங்கத்தின் முதன்மைக் கருத்திட்டமாகக் கருதி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

62.

பா. 101/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— ஆங்கில மொழியில் இரண்டாம் நிலைக் கல்வி வழங்குவதை மேம்படுத்தல்,— அரசியலமைப்பின் 18(3) ஆம் உறுப்புரையின் பிரகாரம், 'ஆங்கில மொழி' இலங்கையின் இணைப்பு மொழியாக (Link Language) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாலும், சர்வதேச மொழியான 'ஆங்கில மொழி' குடிமக்களுக்கு அறிவைப் பெறுவதற்கான பிரதான மூலோபாயமாக அடையாளங் காணப்பட்டுள்ளதாலும், எந்தவொரு மொழியியல் அல்லது இனப் பாகுபாடும் இல்லாமல் ஒரு நாட்டில் வாழ்வதற்குத் தேவையான இணைப்பு மொழியாக ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவது இலங்கையின் அனைத்து குடிமக்களுக்கும் மிகவும் முக்கியமானதென்பதாலும், இலவசக் கல்வி எண்ணக்கருவின் கீழ் தோன்றிய இலங்கையின் மத்திய மகா வித்தியாலயக் கட்டமைப்பிற்குள்ளும் இன்னும் பல பாடசாலைகளிலும் ஆங்கிலத்தில் இரண்டாம் நிலைக் கல்வியை வழங்கும் முறையியல் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருவதாலும், இலங்கைக் குடிமக்கள் சர்வதேச வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஆங்கில மொழி மூலமாகக் கல்வி கற்பது மிகவும் முக்கியமானது என்பதாலும், இலங்கையிலுள்ள அனைத்து இரண்டாம் நிலைப் பாடசாலைகளிலும் (Secondary Schools), 'ஆங்கில மொழி' மூலம் (English Medium) கல்வியை வழங்க வேண்டுமெனவும் அதற்கெனப் போதுமானளவு முதலீட்டைச் செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

63.

பா. 102/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவுதல்,— ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கான தேவைகளை நிவர்த்தி செய்யும் நவீன தொழில்நுட்ப பட்டதாரிகளை வழங்கும் பல்கலைக்கழகம் என்பதால், இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் நிர்மாணம், இயந்திரவியல், கைத்தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகள் உள்ளிட்ட உலகளாவிய தேவைகளையும் கருத்திற் கொண்டு ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் பீடமொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

64.

பா. 103/2025

கௌரவ ரோஹண பண்டார,— நீச்சல் திறமைகளை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல்,— நீரிழ் மூழ்கி உயிரிழக்கும் ஆட்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை அண்மைக் காலமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளதாலும், மிகச் சிறந்த நீர்ப்பாசன நாகரீகத்திற்கு உரிமைகூறும் பண்டைய கால மக்கள் மத்தியில் காணப்பட்ட நீச்சல் திறமைகளை, இன்றைய பரம்பரையினர் மத்தியிலும் மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

65.

பா. 106/2026

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றை நிறுவுதல்,— இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைக்கான தேவைகளை நிவர்த்தி செய்யும் நவீன தொழில்நுட்ப பட்டதாரிகளை வழங்கும் பல்கலைக்கழகம் என்பதால், இலங்கையில் வளர்ச்சியடைந்து வரும் மருத்துவத்துறை உள்ளிட்ட உலகளாவிய தேவைகளையும் கருத்திற்கொண்டு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

66.

பா. 108/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— தியகம வனத்தைப் பாதுகாத்தல்,— கொழும்புக்கு அருகாமையில் எஞ்சியுள்ள கடைசி நகர்ப்புறத் தாழ்நில மழைக்காடுகளில் ஒன்றாகவும் நகரத்திற்கு மிக நெருக்கமான மழைக்காட்டுப் பகுதியாகவும் தியகம வனம் காணப்படுவதனாலும்; பொல்கொட ஆற்றிற்கு நீர் வழங்கும் அதன் சதுப்பு நிலங்கள் மற்றும் நீரோடைகள் ஊடாக நீரோட்டத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இயற்கையான வெள்ளத் தடுப்பு அரணாக இது முக்கிய பங்கு வகித்து, அதன் மூலம் சுற்றியுள்ள சமூகங்களை வெள்ளப் பெருக்கிலிருந்து பாதுகாப்பதனாலும்; சிவப்பு தேவாங்கு, ஊதா முகக் குரங்கு மற்றும் கொடுபுலி போன்ற அழியும் அபாயத்திலுள்ள உயிரினங்கள் உட்பட 220 இற்கும் மேற்பட்ட தாவர மற்றும் விலங்கினங்களுக்கு இந்த வனம் வாழ்விடமாக அமைந்திருப்பதனாலும்; சுமார் 12.6% நிலப்பரப்புக்குரிய தாவர வளங்களுக்கும் 11.58% நிலப்பரப்புக்குரிய விலங்கு வளங்களுக்கும் கடைசிப் புகலிடமாக விளங்கும் ஒரு முக்கியமான பல்லுயிர் மையமாக இது திகழ்வதுடன், இவற்றில் பல விலங்குகள் நகர்ப்புற விரிவாக்கத்தினால் அதிகளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதனாலும்; தியகம வனம் அதன் தேவாங்கு இனங்களுக்காக சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதுடன் சுற்றுச்சூழல் - சுற்றுலாவுக்கான காத்திரமான சாத்தியத்தினைக் கொண்டிருப்பதனாலும்; உயிரியல் பல்வகைமை, காலநிலை மீண்டெழுந்தன்மை மற்றும் சமூகப் பாதுகாப்பைப் பேணுவதற்கு இந்த வனத்தைப் பாதுகாப்பது அவசியமானது என்பதனாலும்; தியகம வனத்தின் இழப்பானது ஈடுசெய்ய முடியாதது என்பதோடு, எதிர்கால சந்ததியினருக்காகவும் இலங்கையின் தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்காகவும்; அதன் உடனடிப் பாதுகாப்பு கட்டாயமானது என்பதனாலும் இந்தப் பாராளுமன்றம் தியகம வனப்பகுதிக்குள் முன்னெடுக்கப்படும் அனைத்து காடழிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும், வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (FFPA) கீழ் அதனைப் பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டுமெனவும், அதனை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகார வரம்பிற்குள் கொண்டுவர வேண்டுமெனவும், அத்துடன் எதிர்கால ஆக்கிரமிப்புகள் மற்றும் நிலைபேறற்ற அபிவிருத்திகளுக்கு எதிராகச் சாத்தியமான வலுவான சட்டப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமெனவும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

67.

பா.109/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவைத் தாபித்தல்,— வடக்கு கிழக்கில் சுமார் 26 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள், காணாமல்போதல் மற்றும் ஏனைய அழிவுகள் தொடர்பாக கண்டறிவதற்கும், தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல் மற்றும் அது தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய அடுத்தகட்ட நகர்வுகளை ஆராய்வதற்குமான செயன்முறைகளை வலுவூட்டுவதற்காகவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவொன்று (Truth Commission) தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

68.

பா.110/2026

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— 15 வயதிற்கு குறைந்த சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்தும் சட்ட வழிமுறையை அறிமுகப்படுத்தல்,— மிகுதியான சமூக ஊடகப் பயன்பாடு காரணமாக சிறுவர்கள் மத்தியில் மன அழுத்தமும் மன உளைச்சலும் அதிகரித்தல், கல்விச் செயலாற்றுகையில் வீழ்ச்சி, இணையவழித் துன்புறுத்தல் (cyberbullying), நாகரிகமற்ற மற்றும் பாதுகாப்பற்ற உள்ளடக்கங்களை பார்க்க நேரிடுதல் போன்ற சிக்கல்கள் அதிகரித்து வருவதாலும், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், டென்மார்க் போன்ற வளர்ச்சி அடைந்துள்ள நாடுகள் சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை ஏற்கெனவே அறிமுகம் செய்துள்ளதாலும், சிறுவர்களின் உள ஆரோக்கியம், பாதுகாப்பு மற்றும் கல்விசார் வளர்ச்சியைப் பேணுவதற்காக சமூக ஊடக கணக்குகளைத் திறப்பதற்கான ஆகக்குறைந்த வயதாக 15 வயதை நிர்ணயித்தல், சமூக ஊடகக் கம்பனிகளுக்கு வயது மெய்யுறுதிப்படுத்தலை கட்டாயமாக்குதல், சட்டத்தை மீறுகின்ற நிறுவனங்கள் மீது அபராதம் விதித்தல் மற்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல், வயது வந்தவர்களின் கணக்குகளைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களை உசாவும் சிறுவர்கள் குறித்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற நகர்வுகளை முன்னெடுப்பதற்காக 15 வயதிலும் குறைந்த சிறுவர்களின் சமூக ஊடகப் பயன்பாட்டை மட்டுப்படுத்தும் சட்ட ரீதியான வழிமுறையொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

69.

பா. 112/2026

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குதல்,— நீண்டகாலத் தன்னிச்சையான தடுத்துவைப்புகளை இயலுமாக்குவதற்கும் சித்திரவதைகள் மூலம் போலி வாக்குமூலங்களைப் பெறுவதற்கும் சிறுபான்மைச் சமூகங்களையும் சிவில் சமூகக் குழுக்களையும் இலக்கு வைப்பதற்கும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாலும், அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்படலாம் என்பதாலும், பயங்கரவாதம் தொடர்பான குற்றங்கள் ஏற்கனவே தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் வழக்குத் தொடரப்படக்கூடியவையாக இருப்பதாலும், பாரிய அதிகாரங்களைக் கொண்ட நிரந்தரமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்றுக்கான நியாயப்படுத்தல்கள் எவையும் இல்லையென்பதாலும், இதேபோன்ற ஏற்பாடுகளைக் கொண்ட எந்தவொரு பதிலீட்டுச் சட்டவாக்கத்தினையும் அறிமுகப்படுத்தாமல், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கு இலங்கை அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

70.

பா. 113/2026

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— பிரிவென ஆசிரியர்களின் ஓய்வூதியத்திற்காக அவர்களின் ஊதியத்திலிருந்து கூடுதலாக ஆறு சதவீதத் தொகையை அறவிடுவதை நிறுத்துதல்,— நவீன பாடசாலைக் கல்வி முறையை போன்றே பாரம்பரியக் கல்வி முறையான பிரிவென கல்வி முறையும் இலங்கையில் நடைமுறையிலுள்ள பிரதான கல்வி முறையாக காணப்படுவதாலும், நவீன பாடசாலைக் கல்வி முறையில் அதன் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு கிடைக்கும் சலுகைகளும் அங்கீகாரமும் பிரிவென கல்விக்கு அல்லது அதன் ஆசிரியர்கள் மற்றும் பிக்கு மாணவர்கள், பொதுநிலை மாணவர்கள் ஆகிய இரு தரப்புக்கும் உள்ளபடியே கிடைப்பதில்லை என்பதாலும், பிரிவென கல்வியுடன் தொடர்புடைய ஒரு முக்கிய அம்சம் என்ற வகையில் பிரிவென ஆசிரியர்களின் ஓய்வூதியத்திற்காக அவர்களின் ஊதியத்திலிருந்து கூடுதலாக ஆறு சதவீதத் தொகை அறிவிடுவதை 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01ஆம் திகதியிலிருந்து நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

71.

பா. 114/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலகச் சுற்றாடலைப் பாதுகாத்தல்,— உலகச் சுற்றாடலைப் பாதுகாப்பது தொடர்பில் இலங்கை அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும், குறிப்பாகப் புவி வெப்பமடைவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

72.

பா. 115/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட வைப்பாளர்களின் நிதியை மீளச் செலுத்துதல்,— பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் நிதியை வைப்புச் செய்த பெருமளவிலான வைப்பாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளதால் அவ்வாறு அக்கம்பனிகளில் வைப்புச் செய்தவர்களுக்கு அந்த நிதியை மீளச் செலுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் இக்கம்பனிகளின் பாதுகாவலர் என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கி இது தொடர்பில் அதிக கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

73.

பா. 116/2026

கௌரவ சமிந்த விஜேசிறி,— அரச வைத்தியசாலைகள் கட்டமைப்பின் வெளிநோயாளர் பிரிவுகளில் நிலவுகின்ற நெருக்கடியைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— உலக சுகாதாரச் சுட்டிகளின் தரவரிசைப்படுத்தலில் எமது நாடு எந்த இடத்தில் காணப்பட்ட போதிலும், அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளில் காணப்படுகின்ற பாரிய நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

74.

பா. 117/2026

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— யானை - மனித மோதல்கள் அதிகமாக இடம்பெறுகின்ற பிரதேசங்களில் தேனீ வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— புள்ளிவிபரத் தரவுகளுக்கமைவாக யானை – மனித மோதல்கள் அதிகமாகக் காணப்படுகின்ற ஒரு நாடாக இலங்கை தற்போது மாறியுள்ளதாலும், அதன் காரணமாக வருடாந்தம் அதிக எண்ணிக்கையிலான மனிதர்கள் மற்றும் யானைகள் உயிரிழப்பதாலும், சொத்துக்கள் உட்பட பௌதிக வளங்கள் அழிவடைவதாலும், இந் நிலைமையினைத் தடுப்பதற்கானதொரு முன்னோடிக் கருத்திட்டமாக கென்யா போன்ற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுவதைப் போன்று, யானை – மனித மோதல்கள் இடம்பெறுகின்ற பிரதேசங்களில் தேனீ வளர்ப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

75.

பா. 119/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் பணியாற்றுகின்ற யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் நலன் கருதி முறையான தங்குமிட வசதிகள் அல்லது அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களை நிறுவுதல்,— யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டு பல சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களினதும் ஆசிரியர்களினதும் போக்குவரத்து நெருக்கடிகள் மற்றும் தங்குமிட பிரச்சினைகளுக்கு நிலையானதொரு தீர்வினை வழங்குதல் மற்றும் அவர்களின் சேவையை வினைத்திறனாக பெற்றுக் கொள்வதனை உறுதி செய்வதற்காக, அந்தந்த மாவட்டங்களில் மையப்படுத்திய ஒரு பிரதேசத்தில் அல்லது பொருத்தமான ஓரிடத்தில் சகல வசதிகளுடன் கூடிய முறையான தங்குமிட வசதிகளைக் கொண்ட அல்லது அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களை அரசாங்கம் துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

76.

பா.120/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— இலங்கையின் கடல்சார் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும், கடல் சார்ந்த கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் சமுத்திர பல்கலைக்கழகமொன்றைத் (Ocean University) தாபித்தல்,— இலங்கையைச் சூழவுள்ள ஆழ்கடல் மற்றும் கரையோரக் கடல் வளங்களை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக கையாள்வதற்குத் தேவையான மனித வளங்களை உருவாக்குவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என்பதால், வட மாகாணத்தில் அதிகளவான கடல்சார் ஆற்றல் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சமூகத்தினரின் வாழ்வாதாரத்தை நவீனமயப்படுத்துவதற்கும், இளைஞர் யுவதிகளுக்கு கடல்சார் பொறியியல், கடல்சார் ஆய்வு மற்றும் நீரியல் வள முகாமைத்துவம் போன்ற துறைகளில் உயர்கல்வி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கும், அனைத்து வசதிகளுடன் கூடிய சமுத்திர பல்கலைக்கழகமொன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் தாபிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

77.

பா. 121/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களிலும் கரையோரக் கிராமங்களிலும் நிலவுகின்ற கடுமையான குடிநீர் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வாக கடல்நீர் சுத்திகரிப்பு கருத்திட்டங்களை (Desalination Plants) விரிவாக்குதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்களில் நிலத்தடி நீரானது உவர் நீராக மாற்றமடைந்து வருவதனாலும், குறிப்பாக வேலணை மற்றும் நயினாதீவு ஆகிய தீவகப் பகுதிகளில் பொதுமக்கள் குடிநீர் வசதிகளைப் பெறுவதில் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருவதனாலும், ஏற்கனவே நயினாதீவு போன்ற பிரதேசங்களில் காணப்படுகின்ற நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கொள்ளளவை அதிகரிப்பதற்கும், குறிகட்டுவான் ஊடாக குழாய் நீர் வழங்கல் கருத்திட்டத்தை துரிதப்படுத்துவதன் மூலம் மக்களின் அடிப்படைத் தேவையாகிய சுத்தமான குடிநீரை இப்பிரதேச மக்களுக்கும் பெற்றுக் கொடுப்பதை உறுதிப்படுத்துவதற்கு கடல்நீர் சுத்திகரிப்புக் கருத்திட்டங்களை விரிவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமையளிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

78.

பா. 122/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாண இளைஞர்களிடையே வேகமாகப் பரவிவரும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட செயலணியொன்றைத் தாபித்தலும் நவீன புனர்வாழ்வு நிலையங்களை அமைத்தலும்,— அண்மைக் காலமாக வட மாகாணத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் தீத்தொழில் மற்றும் போதைப்பொருள் பாவனை காரணமாக சமூகக் கட்டமைப்பானது நலிவுற்றுள்ளதோடு பாடசாலை மாணவர்களின் எதிர்காலத்திற்கும் பாதிப்பை ஏற்படுவதாலும், போதைப்பொருள் விநியோக வலையமைப்பை கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினரின் ஒருங்கிணைப்புடன் கூடிய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான விசேட செயலணியொன்றைத் தாபிப்பதற்கும், போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்காக வட மாகாணத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய அரச புனர்வாழ்வு மற்றும் ஆலோசனை நிலையங்களை அமைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

79.

பா. 123/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தில் பனை மற்றும் தென்னை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிக் கைத்தொழிற்சாலைகளை நிறுவி வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல்,— வடக்கு மாகாணத்தில் பெருமளவில் காணப்படுகின்ற பனை மற்றும் தென்னை ஆகியவற்றை வெறும் மூலப்பொருட்களாக மாத்திரம் பயன்படுத்தாது, நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளாக உற்பத்திச் செய்யும் ஏற்றுமதிக் கைத்தொழிற்சாலைகளை அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்புடன் மாவட்ட மட்டத்தில் நிறுவுவதற்கும், அதன் மூலம் அப்பிரதேசங்களில் வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகள் மற்றும் பட்டதாரிகளின் வாழ்வாதார வழிகளைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

80.

பா. 124/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவித்தலும் விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அக்காணிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குதலும்,— யுத்தத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றச் செயன்முறையின் போது, பொதுமக்களின் காணிகள் இதுவரை முழுமையாக விடுவிக்கப்படாதிருப்பதினாலும், அதன் காரணமாக அவர்கள் தமது பாரம்பரிய விவசாய நடவடிக்கைகளிலும் மீன்பிடித் தொழிலிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை இழந்துள்ளதனாலும், இதுவரை விடுவிக்கப்படாதுள்ள பொதுமக்களின் எஞ்சிய காணிகளை, தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் துரிதமாக விடுவிப்பதற்கும், பொதுமக்களின் வாழ்வாதார வழிகளை மீண்டும் கட்டியெழுப்பும் விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக மேற்படி காணிகளைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

81.

பா. 125/2026

கௌரவ நந்த பண்டார,— மலைப்பாங்கான பிரதேசங்களில் உணவுப் பயிர்களைப் பயிரிடுதல்,— 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இலங்கைக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்திய 'தித்வா சூறாவளி' காரணமாக கேகாலை, கண்டி, மாத்தளை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களின் மலைசார்ந்த பிரதேசங்கள் பெருமளவில் மண்சரிவுக்கு உள்ளாகியிருப்பதாலும், தற்போது இலங்கையின் பெரும்பாலான மாவட்டங்களில் குரங்கு, மந்தி, மர அணில் போன்ற வனவிலங்குகளால் பயிர்களுக்குச் சேதங்கள் ஏற்படுகின்றமையினாலும், இவ்வனவிலங்குகளின் உணவுத் தேவைக்காகவும், சுற்றாடல் சமநிலையைப் பாதுகாப்பதற்கும், மண்ணரிப்பைத் தடுப்பதற்கும், மேற்படி மண்சரிவுக்குள்ளாகியுள்ள மலைப்பாங்கான பிரதேசங்களில் பலா, மா, ஈரப்பலா, காட்டுமா போன்ற உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

82.

பா. 126/2026

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— கித்துள் கைத்தொழிற்றுறையை முன்னேற்றுதல்,— யுனெஸ்கோ அமைப்பு, இலங்கையின் கித்துள் வடித்தல் தொழில்நுட்பத்தினை உலக பாரம்பரியமாக பெயரிட்டுள்ளதனூடாக எமது நாட்டைப் பற்றிய கௌரவம் உலகத்தின் முன்னிலையில் உயர்ந்துள்ள காரணத்தினாலும், காலி, மாத்தறை, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, பதுளை, கம்பஹா உள்ளிட்ட மேலும் பல மாவட்டங்களில் மிகவும் கடினமான சூழ்நிலையிலும் இந்த பாரம்பரிய கித்துள் சார்ந்த கைத்தொழிலைப் பாதுகாத்தவாறு சுமார் ஆயிரக்கணக்கான கைத்தொழிலாளர்கள் இத்தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளமையினாலும், இந்தக் கைத்தொழிலை முன்னேறி வரும் சுற்றுலாத் துறையுடன் ஒன்றிணைப்பதற்கும், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கிராமிய சாதாரண மக்களது பொருளாதார முன்னேற்றத்திற்கான புதியதொரு பாதையை அமைப்பதற்கும், கித்துள் கைத்தொழிற்றுறையின் நீண்டகால பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் பொருத்தமான பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.